59


# ஞானப்பிரகாசம்.

மாதம் ஒருமுறை பிரசுரமாகும்.

புத்தகம் - க. யாழ்ப்பாணம்:—சாதாரணஞு தைமீ. இலக்கம் - சு.


உ

கணபதிதுணை.

மந்திரநான்மறையாகிவானவர்
சிந்தையுணின்றவர்தம்மையாள்வன
செந்தழலோம்பியசெம்மைவேதியர்க்
கந்தியுண்மந்திரமஞ்செழுத்துமே.

## தமிழ்த்தெய்வவணக்கம்.

மறைமுதற் கிளந்த வாயான்
மதிமுகிழ் முடித்த வேணி
யிறைவர்தம் பெயரை நாட்டி
யிலக்கணஞ் செய்யப் பெற்றே
யறைகடல் வரைப்பிற் பாடை
யனைத்தும்வென் றாரி யத்தோ
டுறழ்தரு தமிழ்த்தெய் வத்தை
யுண்ணினைந் தேத்தல் செய்வாம்.

## ஞானப்பிரகாசம்

### சைவபோதம்.

(சுஅ-ம் பக்கத்தொடர்ச்சி.)

அகண்டாகார நித்த வியாபக சச்சிதாநந்தப்பிழம்பாகிய சிவபிரான் சிவசத்தினிபாதமுடைய உயிர்கள் சோபானமார்க்கத்தினாலே உணர்வுகொண்டு உய்வுறும்வண்ணம், தூலமாகவும், சூக்குமமாகவும், அதிசூக்குமமாகவும் திருவுருவங்கொண்டருளி, அவ்வுருவங்களிலே வழிபடும் முறைகளையும் வேதாகமமுதனூல்கள் வாயிலாக வகுத்தருளிச்செய்தார்.

இம் மூவகை வடிவங்களுள்ளே சகளமாகிய தூலவடிவினைமாத்திரம் பொருளென உணர்ந்து காயத்தொழின் மாத்திரையால் சைவாகமத்தில் விதித்தபடி வழிபடுவது சரியை.

அது அடிப்பட்டு வரவர நிகழும் பக்குவ விசேடத்தினால் நுண்ணுணர்வுடையராகிச் சகளநிட்களமாகிய சூக்குமவடிவமே பொருள்; சகளவடிவம் அதனை வழிபடுதற்கு இடமாகிய திருமேனியாம் என இவ்வாறறிந்து புறத்தொழிலினாலும் அகத்தொழிலினாலும் விதித்தவழிநின்று வழிபடுவது கிரியை.

அது அடிப்பட்டு வரவர நிகழும் பக்குவ விசேடத்தால் அதிநுட்ப உணர்வுடையராய் நிட்களமாகிய அதிசூக்கும வடிவமே பொருள்; சகளமும் சகளநிட்களமும் அதனை வழிபடுதற்கிடமாகிய திருமேனி என்று இவ்வாறு அறிந்து அகத்தொழின் மாத்திரையால் ஆண்டைக்கு விதித்தவழியே வழிபடுவது யோகம்.

சரியை கிரியை யோகம் மூன்றும், இவ்வாறு முறையே அடிப்பட்டு வரவர நிகழ்ந்து, பக்குவமுதிர்ச்சியினாலே உள்ளவாறே உணர்வு விளக்கமுற்று, அகண்டாகார நித்தியவியாபக சச்சிதாநந்தப்பிழம்பே சொரூபம்; மற்றைச் சகளமுதலிய மூன்றும் தூலாருந்ததி நியாயமாக அதனை உணர்தற்பொருட்டும் வழிபடுதற்பொருட்டும் கொண்ட திருமேனிகளாம் என இவ்வாற்றானே அறிந்துய்ந்து காயத்தொழில் மனத்தொழில் இரண்டையுங் கைவிட்டு ஒழித்து, கேட்டல், சிந்தித்தல், தெளிதல், நிட்டை என்னும் அறிவின் தொழில் மாத்திரையால் வழிபடுவது ஞானம்.

தூலாருந்ததி நியாயமாவது அருந்ததி நக்ஷத்திரத்தினை அறியாதானுக்கு இது அருந்ததிநக்ஷத்திரமெனக்காட்டின், அது மிகவும் நுண்ணிதாகலின், காணுதல் மிக அரிது; ஆதலால், அதனுடன் தோன்றுவதோர் பெரிய நக்ஷத்திரத்தினை இது அருந்ததி எனக் காட்டி, அதனை அவன் உற்று நோக்கிக் கண்டு உணர்ந்த பின்னர், அருந்ததி நக்ஷத்திரம் அதன்றன்பக்கத்தே தோன்றுநின்றது பாராய் எனக் காட்டி உணர்த்துதல்போல்வதோர் முறைமையின் பகுதி என உணர்க.

ஞானிகள் ஞானமுதலிய நால்வகைத் தொழிலுஞ் செய்தற்குரியர். யோகிகள் யோகமுதலிய மூவகைத் தொழிலும் செய்தற்குரியர். கிரியையாளர்கள் கிரியை சரியை என்னும் இருவகைத்தொழிலுஞ்செய்தற்குரியர். சரியையாளர்கள் சரியைத் தொழில் ஒன்றுமே செய்தற்குரியர்.

---

# தொல்லாசிரியர் செய்யுளழகு.

(௭௦-ம் பக்கத்தொடர்ச்சி.)

இவ்வாறு உலகஇயற்கையிற் றோன்றுவ விளங்கவைத்து நம் அறிவிடத்தே புலப்படும்வண்ணம் புகட்டி மாற்றமுற்று இடையறு ஓசையோடு ஒற்றுமைகொண்டு நடைபெறும் இயல்பு எத்துணைத்தென்க.

காதலனும் காதலியும் முல்லைநிலத்தின்கண்ணே காதற்பிணிப்புண்டு மருவிவாழும் இயற்கை, படம் எழுதிக் காட்டினாற்போல, வருத்தமின்றிக் காட்டப்பட்டது.

இத்துணை நுட்பம் வாய்ந்த உலகியல்அறிவு பண்டைக்காலத்துத் தண்டமிழ்ப் புலவரிடம் காணப்படுதல்போல, ஏனைப்பாஷைகளில் வல்லுநர்பாற் காண்டல் அரிது.

இன்னும் இவ்வாசிரியர்கள் உலகியற்கைப் பொருட்காட்சிகளை வருணித்துப் பாடும் முறைமைகளும், அவ்வுலக இயற்கைக்கும், மக்களியற்கைக்கும் இடைநின்ற தொடர்புகளை விரித்துரைக்கும் அவர் மனோசக்தியின் வலியும் இன்றும் எவர்மனத்தும் நின்றுலாவாநிற்கும்.

ஒருகாலத்திற் றோன்றி நடக்கும் நூல்களுக்கும் அக்காலத்திலியலும் ஒழுக்கங்களுக்கும் பெரியதோர் தொடர்புண்டென்று அறியவேண்டும்.

ஒருநூலினியல்பைக் கண்டறிதற்கு அந்நூல் எழுதப்பட்ட காலஇயல்பே முதலறியப்படற்பாலது.

கால இயல்பு என்பது கையினாற்றீண்டி அறிதற்காகாததோர் இயற்கை, அஃது அவ்வக்காலத்து இயற்றப்பட்டு வெளிவரும் நூல்களிலும், பணிநுட்பம் அமைய அமைக்கப்படும் சிற்பங்களிலும், ஆடைகளிலும், அவர்கள் மேற்கொண்டொழுகும் வாணிக வாழ்க்கையினியன் முறைகளிலும், அவர்கள் நிறுவிய தொழிற்சாலைகளிலும், தனது இலச்சினையை இட்டுவைக்கும் பான்மை கொண்டுள்ளது.

புலவன் எழுதுவனவற்றை உருவெனக்கண்டு நிறம் ஊட்டுவதும் அக்கால இயற்கையே என உணர்க.

ஆதலால் ஆசிரியர்கள் இயல்புகள் ஆராய்தற்கு, அவர்காலத்தின் பொதுவியல்பும், அக்கால மக்கள் கொண்ட ஒழுக்கநடையின் இயற்கையும், அவன் இருந்த இடத்தின் பொது இயற்கையும், சிறப்பியற்கைகளும் முதல் வேண்டப்படுவனவாம். உவில்லியம் மிண்டோ என்னும் ஆங்கிலபண்டிதசிரோமணி கொள்கையும் இதுவேயாகும் என்க.

# அருனிய சயன விரதம்.

இவ்விரதம் மச்சபுராணத்திலே கூறப்பட்டிருக்கின்றது.

ஆவணிமாதத்திலே சுக்கிலபக்ஷத் துதிகையிலே, ஸ்ரீமந். நாராயணமூர்த்தியானவர் ஸ்ரீ. மகாஇலக்குமிதேவியோடும் ஒன்றிப் பாற்கடலிலே எழுந்தருளி இருப்பர்.

அன்று, மெய்யன்போடும் ஸ்ரீ. மகா விஷ்ணுமூர்த்தியைத் தியானித்துப் பூசனை செய்வோர் அளவற்ற காமியங்களை எய்துவார்கள். இன்னும் பூதானம், கோதானம், சுவர்ணதானம் ஆகிய இவைகளைச் செய்தவர் அனேககோடி கற்பகாலம் பெறற்கரும் போகங்களை நுகருவார்கள்.

விஷ்ணுமூர்த்தியினையும், இலக்குமி தேவியையும் பொன்னில் அமைத்து. "சிகாந்த, சிபதிவாச" என்றற்றொடக்கத்துத் திருநாமங்களை எடுத்தோதிப் பூசனைசெய்து தன்னுள்ளத் தெண்ணங்கள் அனைத்தையும் விண்ணப்பித்துச் சுவாமீ! தேவரீர் பிராட்டியாரைப் பிரிவின்றிச் சார்ந்திடுகின்ற அருனிய சயனமாய்த் தினமும் சேர்ந்திருத்தல் போலவே யானும் எனது தேவியுடனே கூடி அணைந்து வாழ்வுறத் திருவருள் செய்யவேண்டும் எனப் பிரார்த்தித்து, அந்நாட் பகற்பொழுதிலே உபவசித்திருந்து; இரவிலே மிளகும் உப்பும் எண்ணெயும் கலவாது அமைந்த உணவினை அருந்தி, மனம் வேறுபடாத நெறியினோடும் நித்திரைஇன்றி இருந்து சூரியன்உதித்தலும், பரியங்கமொன்று அமைத்து அதிலே விஷ்ணுமூர்த்தியின் திருவுருவினையும் இலக்குமியின் திருவுருவினையும் வைத்து தீபம், அன்னம் கலந்தபாத்திரம், பாதுகை, குடை, சாமரை, ஆசனம், தக்ஷிணை, வெண்பூ, நீர்க்குடம், முக்கனிகள், சந்தனம், பொன்னாபரணம், வெண்துகில் என்னும் இவைகளுள் தம்சக்திக்கேற்பத் தேடி அந்தணரொருவரை அவர் மனைவியுடன் வரித்து, மனமுருகிப் பூசனை புரிந்து இன்மொழியோடு உபசாரவசனங்களை எடுத்துக்கூறி, முன்னே கூறிய அன்னம் பாத்திரம் ஆடைமுதலியவற்றை அத்தம்பதிகளுக்குதவி, பொன்னாற் செய்த அத்திருவுருவங்களிரண்டையும் கும்பத்தினையும் மற்றைய பொருள்களையும் அவ்வந்தணர் கையிலே தானஞ்செய்து உபசரித்து அவரை அனுப்பிவிடுதல் முறைமையாகும். பரியங்கம்—கட்டில்.

இவ்விரதத்தினை மனைவியோடும் அனுட்டிப்பவர்கள் செல்வத்தோடும் மனைவியரோடும் கூடிவாழ்வார்கள்.

இவ்விரதத்தினைப் பெண்கள் அனுட்டிக்கின் நாயகனைப்பிரியாது கூடிவாழ்குவர்.

இவ் அருனிய சயன விரத மான்மியத்தினைச் சச்சிதானந்தப் பிழம்பாகிய சிவபெருமானே சூதமாமுனிவர் முதலிய இருடிகளுக்குத் திருவாய்மலர்ந்தருளினார்.

# வைத்தியவிசாரம்.

(௭௨-ம் பக்கத்தொடர்ச்சி.)

## செறிவைசூரி.

குணம்—இது ஐதுவைசூரியிலிருந்து வேகங்கொண்டெழும் தன்மையில் மாத்திரம் பேதப்படும். இதற்குக் காய்ச்சல் கொரேமுடையதாகிப் பருக்கள் தோன்றுங் காலத்தொடங்கிச் சீழ் பிடிக்கும் வரையும் தணிதலின்றி வேகம் அதிகப்பட்டுவரும்.

இரண்டாம் காய்ச்சல் கொரேமாகும். அனேகருக்கு மூடத்தன்மையும் புலம்பலும் காணும். சிலருக்கு வரைவின்றி மலவியக்கம் உண்டாம்.

இன்னும் பருக்கள் தோன்றுவதும் மறைவதும் அமைக்கப்பட்ட ஒழுங்கில் நில்லாது முதல் தோலிலே வீக்கமும் செந்நிறமும் காணப்படும். அதிலிருந்து இரண்டாம் நாளிலே நுண்ணிய சிவந்த புள்ளிகளாகப் பருக்கள் காணப்படும். இவைகள் தொடக்கத்திற்றானே சீழ்பிடிக்கும். சீழ்கொண்டபின் பருக்கள் திரட்சி உடையனவாதலின்றித் தட்டைவடிவினவாயும் ஒழுங்கற்றனவாயும் இருக்கும். சிலருக்குப் பருக்களிலே சீழ்பிடியாது கருமைநிறம் கொண்ட ஓர்வகை நீர் காணப்படும்.

சிலருக்குத் தாபிதமான்து மிகவும் உள்ளே ஆழ்ந்து தாவிச்செல்லும் இயல்பினால் தோலானது அழுகத்தொடங்கும். முகத்திலே வீக்கம் தோன்றி வரவர அதிகமாகும். உமிழ்நீர் மிகமிஞ்சிப் பெருகும். தொடங்குங்கால், காய்ச்சல் இலகுவாயிருப்பினும் பருக்கள் தோன்றியவுடன் முழுதும் தணிந்துவிடுதலின்றி ஒன்பதாம்நாள்வரையிலே மிகவும் அதிகமாகிக் கொடூரமாகும். சிலருக்குச் சன்னிச்சுரத்திற்கு உரிய கெட்ட குணங்கள் எல்லாம் ஆரம்பிக்கும். பருக்கள் கருமைகலந்த செந்நிறம் உடையனவாகும்; அன்றிக் கருநிறமுடையனவாகவே இருப்பினும் இருக்கும். விபல (*Passive*) இரத்தம் பெருகத் தொடங்கும். அன்றி உதிரத்தோடு கலந்து சிறுநீர் வெளிப்படும். கடுப்பும் வயிற்றுல் இரத்தப்போக்கும் உண்டாம். இக்குணங்களுள்ளே சிற்சில, சிலர்க்குக் கூடியும் குறைந்தும் முற்றுமின்றியும் காணப்படும். மூடத்தன்மையும் வலிக்குணமும் தோன்றும். உதடுகளிலும் பற்களிலும் அவைகளின் சந்துகளிலும் அழுக்கடையும். அனேகமாய், இக்கொடிய நோய் ஆரம்பித்துப் பதினோராம் நாள் இரவில் மரணம் உண்டாம். சுகப்படுமாயின், ஐதுவைசூரியினால் உண்டாகும் தழும்புகளினும், இதனாலுண்டாகும் தழும்புகள் மிகவும் ஆழ்ந்தும் அகன்று விசாலமுடையதாகவும் நிலைபெற்றிருக்கும்.

யாழ்ப்பாணம் இருபாலை
வித்துவசிரோமணி
சேனாதிராயமுதலியாரவர்கள் இயற்றிய

# நல்லைவெண்பா.

(எசு-ம் பக்கத்தொடர்ச்சி.)

தூவிமயின் மீதாகச் சுந்தரநல் லூரிறைவன்
சேவலங்கை யான்பவனி சேர்ந்ததுதான்—நீவகம்போ
லக்குருகு முன்னா வவர்க்குருகு மாயிழையார்
கைக்குருகு கொள்ளவே காண்.

சேவல் - சேவற்கொடி. நீவகம் - பார்வை மிருகம். குருகு - பறவைப் பொது. அது ஈண்டுச் செவ்வேளூர்ந்தருளும் மயிலுக்கு ஆயிற்று. அவர்க்கு உருகும் எனப் பிரிக்க. கைக்குருகு - கையிலணிந்த வளையல்கள். பவனி சேர்ந்தது குருகுகாட்டிக் குருகு கொள்ள என்பதாம். (௩௧)

சந்தமணி சீர்பொருள்கள் சார்ந்தகர முன்னதாச்
செந்தமிழே போலுந் திருநல்லை—செந்தேனு
மாவுங் கனியுமென்றூர் வல்லிசெவ்வாய்த் தேனுக்கு
நாவுங் கனியுமென்றூர் நாடு.

சந்தமும் அணியும் சீரும் பொருள்களும் சார்ந்து அகரத்தை முதலெழுத்தாக உடையதாய் எனச் செந்தமிழுக்கியையக் கொள்க. சொற்கள் நின்று தரும் ஆன்றபொருளமைதிகளும் அகம் புறம் என்னும் பொ ட்பகுதிகளும் அடங்கப் பொருள்கள் என்றூர். அழகிய இரத்தினங்களும் சிறந்த திரவியங்களும் பொருந்தி மாளிகைகளை முற்பக்கங்களிலே உடையதாய் என நல்லூருக் கியையக் கொள்க. அகரம் - வீடு. மென்று - செந்தேன் முதலியவற்றை மென்று. ஆர் - நிறைந்த. வல்லி - வள்ளிநாயகியார். நாவும் கனியும் என்றூர் - எனது நாவும் உருகி நீர் ஊறுகிற்கும் என்று திருவாய்மலர்ந்தருளினவர். (௩௨)

பாகனசொல் லார்நகையும் பன்னு சிவநூலு
மாகதியைக் காட்டு மணிநல்லை—நாகவுரி
போர்க்குமரன் சத்திதரப் போந்தசுரர் மாளவடும்
போர்க்குமரன் சத்திதரன் பூ.

நகை மாகதியைக் காட்டல் - பற்கள் முல்லையரும்புகளை ஒத்திருத்தல். சிவநூல் மாகதியைக் காட்டல் - சைவாகமங்கள் வீடுபேற்றிற்கு நிமித்தமாவன இவை எனக் காட்டுதல். நாகவுரி - யானைத்தோல். அரன் சத்தி தர - சிவபெருமானும் உமாதேவியாரும் பயந்தருள. போர் குமரன் - எனப் பிரிக்க. சத்தி தரன் - வேற்படையினைத் தரித்தவர். (௩௩)

வரும்.

# சவுக்குமரம்.

இச்சவுக்குமரத்தினால் நம் நாட்டினர் அடையக்கூடிய பிரயோசனங்கள் எண்ணிலாதன. பலவகையாகிய கைத்தொழில்கள் செய்துகொள்ளக்கூடியன. இவ்விருக்ஷம் இந்தியாவிலே விசேஷமாய்ப் பயிரிட்டு வளர்க்கப்பட்டு வருகின்றன. பயிர்ச்செய்கைக்கு உரியதல்லாத வெற்றிடங்களிலும் வெறும் பெரிய வெளிநிலங்களிலும் உண்டாக்கிப் பெரும்பயன் அடைகின்றார்கள். நம்மவர்கள் இதைக்கவனிப்பதில்லை.

இம்மரம் நீர் வளங்குன்றாத மணற்பாங்கான இடங்களிலே நன்றாய்ச் செழிப்புற்று வளரும். விசேஷமாய் இதன் வளர்ச்சிக்குக் காற்றோட்டமும் வேண்டப்படும். கடற்கரைகளிலே மணற்பரப்பாகிய இடங்களிலும் ஆற்றங்கரைகளிலும் இது மிகச் செழிப்புற்று உயர்ந்து வளருகின்றது. மணற்பாங்காகிய நிலத்தை உடையவர்கள் இதனைக் கவனிக்கவேண்டும். இப்பயிர்ச்செய்கைக்கு அதிகம் செலவு வேண்டியதில்லை. ஆனால் முன்னே ஒருசிறிது செலவுசெய்து சிலவருஷங்கள் வரையும் பொறுமையோடு காத்திருக்கவேண்டும் பின்தான் பெரும் பலன்வந்து கைகூடும். இந்தியாவிலே இப்பயிர்ச் செய்கையினாலே அனேகம் வறியசனங்கள் பெருந் தனவந்தர்களாகி விட்டார்கள் என்றும் நாம் அறிகின்றோம்.

நம்மூரிலே இதனை ஒருவரும் உபயோகப்படுத்தும் வழக்கமில்லை அதன் இலைகளைப் பூச்செண்டு கட்டுதற்கு மாத்திரம் உபயோகிக்கின்றார்கள். இந்தியாவிலே இது பயிரிடப்படும் முறைகளும் அதனால் அவர்கள் அடையும் பலன்களையும் எடுத்துக் காட்டுவாம்.

இச்சவுக்கை நாற்றுநட்டு அது வளர்ந்து வரும் சிறிது காலத்துள்ளே அவைகளுக்கிடையிலே ஆமணக்கம் பயிர்செய்து ஓர்வகை இலாபம் அடைகின்றார்கள். இச்சவுக்குப் பயிர் தானாகவே தலையெடுத்து வளரத் தொடங்கும் வரையிலும் சிலநாள்களுக்கு நாடோறும் ஒவ்வோர் முறை நீர் பாய்ச்சவேண்டும். ஆகலால் அது பயிரிடப்படும் புலங்களிலே இடையிடையே நீரூறும் ஆழம்வரைக்கும் சிறுகிணறுகள் தோண்டப்படவேண்டும். வளரும்வரையிலும் ஆடுமாடுகள் கடிக்காவண்ணம் பாதுகாக்கப்படவேண்டும். இதன்பொருட்டுச் செய்யவேண்டிய சலசவுக்கியங்களினால் அப்புலங்களிலே, வெண்டை, கொத்தவரை, சுரை, வெள்ளரி, பூசினி முதலிய விதைகளை நட்டு சிறுலாபம் அடைகின்றார்கள்.

நாற்றுநட்டபின் நல்ல போஷணையும், காவலும் தவறாத பருவ மழைகளும் அமையப் பெறுமாயின், சவுக்குமரங்கள் ஐந்து வருஷங்களுள்ளே வளர்ச்சியுற்று வெட்டி உபயோகப் படுத்தற்குரியவாகின்றன. வெட்டப்பட்ட இதன் கட்டைகள் கரும்பாலைகளுக்கும் பஞ்சாலைகளுக்கும் மிகவும் உபயோகமாகின்றன. இதன்விறகுகள் மிகவும் வெப்பமுடையன. சவுக்குவிறகினால் சமையல் செய்யின், விரைவிலே சமையற்றொழில் நிறைவேறும்.

ஆயினும் அவ்விறகுகொண்டு சமைத்த உணவு மிகுதியும் உஷ்ணமுடையதென்று வைத்தியர்கள் கூறுகின்றார்கள். சீமைக்கரியின் குணத்திற் பாதி இதற்குண்டு. ஆதலினால் புகைவண்டிகளுக்கும் ஆலைகளுக்கும் உபயோகப்படுத்தி வருகின்றார்கள். இவ்வுபயோக அருமை நோக்கியே இந்தியர்கள் பயிரிட்டுப் பாதுகாக்கின்றார்கள்.

இதன் வேரும் விறகாகப் பாவிக்கப்படுகின்றது. இதன் நுனிமுதல் அடியின்காறும் உள்ளன யாவும் உபயோகத்திற் குரியனவேயாகும் அதன் காய்ந்த இலைகளும் செத்தைகளும் சிலவறிய சனங்களால் அடுப்பெரிக்கப் படுகின்றது. அதனது சிறிய சுள்ளிகளும் சிறுசிறு கட்டுகளாகவந்து கட்டொன்று இரண்டுதம்பிடியாக விலைப்படுகின்றது.

பெரும் அடிக்கட்டைகள் சிறுதுணிகளாகத் தறிக்கப்பட்டு விறகு வாடிகளிலே, ௫௰-ர்த்தல் (ஒரு குண்டு) நான்கணா அல்லது மூன்றேமுக்காலணா வீதம் காலவியல்புநோக்கி விலைப்படுகின்றன.

சவுக்கமரத்தின் காய்ந்தகாய்கள் அப்பம் சுட்டு விற்பவர்களுக்கு மிகவும் உபயோக மாகின்றன. அப்பம் சுடும் சட்டியின் மேலே வைக்கப்படும் சட்டியிலே இதன் காய்களை இட்டு நெருப்பூட்டினால் நெருப்பு அதன் காய்களிலே பற்றி அவியாது தழலுண்டைகளின் சுவரூபங்கள்போல, விளங்கி, சுவாலை வீசிக்கொண்டிருக்கும். இதனை எம்மூரவர்கள் இன்னும் கவனிக்கவில்லை.

இம்மரம் விளைவுமுதலியன இன்றி எறக்குறைய ௯௰ அல்லது ௭௰ அடி உயரம் வளரும் இயல்பினை உடையது. ஆதலினால் பலவேலைகளுக்கும் உதவுகின்றது. ஐப்பசி கார்த்திகை மாதங்களிலேயே இவைகள் வெட்டப்படுகின்றன. மாரிகாலங்களில் வெட்டப்படுதலினால் அம்மரங்கள் உளுத்துப்போகும் குணம் இல்லாமற்போம் என்பது அவர்கள் அபிப்பிராயம்.

சவுக்குமரத்தின் கழிகள் தார்பூசப்பட்டு வீடுகள் கட்டப்படுதற்கும் உபயோகிக்கப் படுகின்றன. இக்கழிகள் அனேக வருஷங்கள் வரைக்கும் உளுத்துப்போகாமல் நல்ல நிலைமையில் இருப்பதை எவரும் காணலாம். கூத்துக் கொட்டகைகள், கலியாணமண்டபங்கள் எல்லாம் இதன் கழிகளாலே அமைக்கப் படுகின்றன.

இம் மரப்பட்டையினின்றும் ஓர் வகைச் சாயம் எடுக்கப்படுகின்றது. இதன்பட்டைகளை ஊறவைத்து வலைஞர்கள் மீன்பிடிக்கும் வலைகளுக்கு ஒரு வகைச்சாயம் கொடுக்கின்றார்கள். அதனால் அவ்வலைகள் பளபளப்பாயும் வலிமையுடையனவாயும் இருக்கின்றன. இதனைக்கண்டு மேனாட்டினர். சாயம் எடுக்கும்பொருட்டு, இந்தியாவினின்றும் ஏற்றுமதி செய்கின்றார்கள். இதினின்றும் எடுக்கப்பட்ட சாயத்தோடு அதற்கு வேண்டுவ சிலவற்றைக்கூட்டி காக்கி (*Kaki*) எனப்படும் சாயம் செய்கின்றார்கள்.

களர்நிலத்திலே இன்னும் இதன் செத்தைகளை. இரண்டடி உயரம் நெருக்கமாகப் பரப்பி. தண்ணீர் பாய்ச்சிவரின். அந்நிலம் பதப்பட்டுப் பயிரிடுவதற்கு உபயோகம் ஆகின்றது.' இவ்வாறு இதன் உபயோகம் சொல்ல முடியாதென்க.

மா. சிவராமலிங்கம்பிள்ளை
ஆறுமுகநாவலர்வாசிகசாலை
வண்ணார்பண்ணை.

---

# தலயாத்திரைப் பொதுவிதி.

(௪௦-ம் பக்கத்தொடர்ச்சி.)

சிவகுலம், சிகாகுலம், சோதிகுலம், சாவித்திரி குலம் என்னு நான்கனுள் பிராமணர்களுக்குச் சிவகுலமும், க்ஷத்திரியர்களுக்குச் சிகாகுலமும், வைசியர்களுக்குச் சோதிகுலமும், சூத்திரர்களுக்குச் சாவித்திரிகுலமுங் கூறப்படும். அவருள் முதன்மூவர்க்கும் முனிவர்க்கும் உரித்து. முனிவர்க்கமெனினும் இருடிகோத்திரம் எனினும் ஒக்கும். சூத்திரருக்குக் கோத்திரமின்மை மேலே கூறினும்.

## அப்பிரமயக்ஞ பிதிர் தர்ப்பணக்கிரமம்.

பிதிர் தர்ப்பணம் பிதா. பிதாமகன், பிரபிதாமகன். மாதா, பிதாமகி, பிரபிதாமகி. சாபத்தினி மாதா, மாதாமகன். பிரமாதாமகன், விருத்தப்பிரமாதாமகன். மாதாமகி, பிரமாதாமகி, விருத்தப்பிரமாதாமகி. பிதாவோடுபிறந்தவன், மாதுலன். சகோதரன், அவரவர்பத்தினிகள். தன்பத்தினி, புத்திராதிகள். பிதாவின்சகோதரி, மாதாவின்சகோதரி. அவரவர் நாயகர், அவரவர் புத்திரர்கள். மாமன். மாமி. குரு. சீடன். ஆப்தன் என்னும் இவ்வரிசைப்படி செய்வது.

மேற்சொல்லிய இருவகை நித்திய தர்ப்பணங்களிலும் திலதர்ப்பணம். விவாகம், சௌளம், உபநயனம் முதலிய கருமங்களுக்குப் பின் ஆறுமாதம் மூன்றுமாதம் செய்யலாகாதென்றும். புத்திரகாமிக்குச் சப்தமி. ஜன்மநக்ஷத்திரம். நந்தை. சுக்கிரவாரம் கிருத்திகை. மகம். பரணி. பானுவாரம் இவைகளில் செய்யலாகாதென்று விலக்கப்படும்.

இனி நைமித்திக தர்ப்பணமாவது. புதிதாக வந்த தினத்துத் தீர்த்தத்தில் சிராத்தத்தின் முன் மேற் கூறிய கிரமப்படி பிதாமுதலியோருக்குச் செய்வது. இதுவன்றி. சங்கிராந்தி கிரகணகாலங்களிற் செய்யப்படும் தர்ப்பணமும் நைமித்திக தர்ப்பணம் எனப்படும்.

மேற் கூறியபடி அந் நிஷேதகாலங்கள் பிதிர் சிராத்தத்திற்கு இல்லாததுபோல் தீர்த்ததர்ப்பணத்துக்கு இல்லை. அதனால் தீர்த்த விசேடங்களினும், கங்கையினும். மாளயபட்சத்தும். நிஷேதகாலங்களிலுந் தில தர்ப்பணஞ் செய்யலாமெனக் கூறுவர்.

ஓர் பாத்திரத்து மார்ச்சனமுதலிய செய்த சேடத்தால். தர்ப்பித்தும். ஓர் தாரையாய் விடுதலும், ஓர் கையால் விடுதலும் குற்றமாம்.

கரையில் சுத்தபூமியில் தெற்கு முகமாயிருந்து தருப்பையிட்டு இடது முழந்தாள் மடக்கிப் பூமியிலூன்றி நேரேயிருந்து இரண்டுகையையுஞ் சேர்த்துத் தர்ப்பணஞ்செய்க.

அதுவன்றித் தாமிர முதலியவற்றால் பசுவின் காதுபோற் செய்யப்பட்ட பாத்திரத்திற் சலமெடுத்து இடது கையில் வைத்துக்கொண்டுந் தர்ப்பணஞ் செய்யலாம்.

அத்தர்ப்பணத்தைப் பாத்திரத்திலேற்றுப் பின் சுத்ததேசத்து விடவேண்டும் அல்லது சுத்தபூமியில் சிறிய பள்ளம் அமைத்து அதினுந் தர்ப்பிக்கலாம். தர்ப்பிக்குங்கால் கோவின் மருப்பினுனிப்

பிரமாணமேயன்றி அதிகசலந் தர்ப்பித்தல் குற்றமாம்.

மாதாவுக்கும், பிதாமகிக்கும், பிரபிதாமகிக்கும் மூன்றஞ்சலி. சாபத்தினி மாதாவுக்கும், குருபத்தினிக்கும் இரண்டஞ்சலி. ஆத்மபத்தினிக் கஞ்சலியொன்றும், உச்சாரணம் மூன்றுமாம். ஏனையோர்க்குத் தனித்தனி அஞ்சலி ஒன்று. மாதா முதல் எல்லோர்க்கும் தனித்தனி ஓரஞ்சலி என்பாருமுளர்.

தருப்பை, எள்ளு, இவைகள் பொருள் கொடுத்தன்றி, ஒருவரிடத்தில் வாங்குதல் குற்றம். வாங்கினால் பலன் அவரையே அடையும்.

வரும்.

சிவ. இ. மாரிமுத்து உபாத்தியாயர்
வண்ணார்பண்ணை.

---

மங்கையர்க்கரசி என்னும்

# கமலாம்பிகைசரித்திரம்.

(௮௰-ம் பக்கத்தொடர்ச்சி.)

அப்பொழுது கமலாம்பிகை கூறுகின்றாள். ஆருயிர் அனைய சேடியர்காள்! என்னுடைய துன்பத்தை உங்களிடம் அல்லாமல் வேறு யாரிடம் கூறப்போகின்றேன். நான் காதகியாகிய சிற்றன்னையினால் சங்கடமுறும் வண்ணம் மண்பொதுத்தந்தை என் சிரசில் வரைந்து விட்டனர். என்னுடைய நிலைமையை நீவிர் அறிந்திருந்தும் அறியார்போல வினாவது ஆச்சரியமே. ஆயினும் கூறுகிறேன் கேண்மின். அவள் மருந்துசெலுத்தி என்னைக் கொன்றுபோட யோசித்திருக்கின்றனளாம். எனது உடன்பிறவாச் சோதரர்களாய ஆறுமுகன் அம்பலவன் என்னும் இருவரும் அவளுடைய துர்ப்போதனைக் கிணங்கி என்னைக் கொலைசெய்துவிட யோசித்திருக்கின்றனராம். அவ்விரு காதகர்களும் தங்கள்மீது நான் ஐயுறுவண்ணம் தங்கச்சி கமலம்! கமலம்!! என்று கூவிப் பொய்விசுவாசங்காட்டித் திரிகின்றார்கள். நான் இராசகுமாரியாயிருப்பது பொறுமையாக விருக்கின்றது. அவர்களுக்கு நான்செய்த குற்றம் ஒன்றும் இல்லையே. அவர்களோடு உடன்பிறந்த சகோதரிக்கும் எனக்கும் என்ன வித்தியாசம்; இவர்கள் துர்நடத்தையுடையவர்களாய் இருந்து அதன் பெறுபேறாக முன்னர்ச் சம்பாதித்த பழிபாவங்களுக்கெல்லாம் அந்தரங்கமாகப் பொருளுதவி செய்து காப்பாற்றிவிட்ட நன்மையையும் மறந்துவிட்டார்கள். இவர்கள் கமலம்! கமலம்!! என்றழைப்பது நீ சீவிப்பது அவலம்! அவலம்!! என்பதுபோலிருக்கின்றது. கைந்நாகத்துக்கும் கபவாய்க்கும் நாரைக்கும் பின்னாகிய உயிர்க்கும் பேரருள்செய்த பெருமானே, அடைக்கலம்! நான் யாது செய்யப் போகின்றேன். தேவரீருடைய துணையேயல்லாமல் இப்பொழுது வேறொருவருடைய உதவியும் இல்லை. அடியாள் தன்மீதன் றளிக்குந் தருநிழற் கீழ்வாழ்வை வேண்டேன்; கிடைத்தற்கரிய திருவடிப் பேற்றையே விரும்புகின்றேன் என்று கூறி விம்மி விம்மி அழுதனள்.

இவைகளையெல்லாம் புஷ்பகாந்தியென்னும் பெயருடைய சேடியானவள் கேட்டுத் துடித்துப் பதைத்து அம்மா! அரசனுறங்கும்போதும் அவன் ஆணை காவல் செய்யும் என்பது உண்மைநூல்களின் துணிபு. அநுபவத்திலும் அப்படியே. இந்த இராசாங்கம் முன் எவ்வளவோ ஒழுங்காயும் நீதியாயும் நடைபெற்றுவந்தது. செங்கமலம் என்னும் உமது சிற்றன்னையார் என்று இந்நாட்டில் வந்தாளோ அன்றே நீதிபரசுரிமை நிலைகெட்டோடிவிட்டது. தமது தந்தையாராகிய மகாராஜாவும் இராஜாங்கக் கவலைகளைவிட்டு அவள் பாதமே புகலிடமென மயங்கிக் கிடக்கின்றார். அவள் வசியமருந்திட்டு மகாராஜாவை மயக்கிவிட்டனள். இது திண்ணம். அரசு விஷயமாக அறிவான்மிகுந்த அமைச்சர்கள் கூறுவதை எள்ளளவேனும் கவனிக்கின்றாரில்லை. அம்மா! இனிமேல் தாங்கள் வாளாவிருந்தால் இவ்விராசாங்கம் அழி

ந்துபோம் நீங்கள் துன்பக் கடலினின்றும் கரைசேர ஒரு மார்க்கத்தையும் காணேன், ஆனால் ஒருவழி இருக்கின்றது; பாஞ்சால நாட்டு இளவரசரும் தங்கள் மாதுலர் குமாரரும் பள்ளித் தோழரும் ஆகிய கருணாகரரென்னும் தோன்றலுக்கு உமது நிலைமையைப்பற்றிக் கடிதம்வரைந்து அகிலாண்டத்தினுடைய மகன் சுமுகனிடம் கொடுத்து அனுப்பினால் அவர் இங்கு வந்து ஒரு ஏற்பாடு செய்யமாட்டாரா? என்றனள்.

அப்பொழுது இவள்சொல்லும் வார்த்தைக்கு மாறுபாடு கூறும் விரதமுடையளாகிய காஞ்சனமாலையானவள் நன்று! நன்று!! இப்புத்திக்கு இலட்சம்வராகன் கொடுத்தாலும் தகும். கன்னிகையாயிருக்கும் ஒருபெண் நாணம் மடம் அச்சம் பயிர்ப்பு என்னும் குணங்களை விட்டு ஒரு ஆடவனுக்குக்கடிதம் எழுதலாமா? வந்துற்ற பேராபத்தினின்றும் தப்பித்துக்கொள்ளும் நோக்கமாகக் கடிதம் எழுதுகிறதாக வைத்துக் கொள்வோம்; மகாராசாவுக்கு அவன் மருமகனாகவிருந்தாலும், ஒருவரையொருவர் எப்போ வெல்வோம் கொல்வோம் எனக் காத்திருக்கும் சத்துருக்களாகவிருக்கின்றார்களல்லவா? எங்கள் தலைவியே! பாதகியாகிய தமது சிற்றன்னையையும் அவள் போதனைக் குடன்பட்டு உமக்குத் தீராத் துன்பத்தைத் தந்துகொண்டிருக்கும் இருவரையும் கொலைசெய்துவிட்டாலென்னை? என்று கூறினாள். அப்பொழுது புஷ்பகாந்தி கோபாக்கினி சொலிக்க அதற்கு உத்தரம் கூறத் தொடங்கலும்.

கமலாம்பிகை கையமைத்து ஏது சகிகாள் கிணறுவெட்டப் பூதம் புறப்பட்டாற்போலவிருக்கின்றது. உங்களுடைய குரோதத்தை இவ்விடத்திற்றானா பிரயோகித்தல் வேண்டும். தயவுசெய்து கதையை நிறுத்துங்கள் என்றனள். அப்பொழுது இருவரும் பெட்டியிற் பாம்புபோ லடங்கி விட்டனர்.

காதாநாயகியாகிய கமலாம்பிகையானவள் சிறிதுநேரம் ஆலோசித்துச் சேடியாகிய காஞ்சனமாலையின் அறியாமையை எண்ணிப் பச்சாத்தாபப்பட்டு மனம் பதைபதைத்துச் சிவ! சிவ!! என இரு செவிகளையும் பொத்திக் காஞ்சனமாலையே என்ன வார்த்தை சொன்னாய் இனிமேல் ஒருகாலத்தும் விளையாட்டுக்குத் தானும் சொல்லாதே. புஷ்பகாந்தியே நீயும் கேள் நூல்களிலே கொலை மகாபாதகம் என்று விதிக்கப்பட்டிருக்கின்றது.

வேதாகம வழியிலே நடவாமல் கொலையாகிய மகாபாதகத்தைச் செய்தவர்களை நால்வகைத் தண்டஞ்செய்து பாவந்தீர்த்து நல்ல வழியிலே நடப்பிக்கற்பொருட்டு, சிவபெருமான் சூரிய புத்திரனாகிய மனு என்னும் அரசனை நியமித்து மேருமலையிலே இருத்தினார். அவ்வரசனுடைய கட்டளையின்படியே பூலோக வேந்தர்கள் வெளிப்பட்ட கொலைஞர்களைத் தண்டித்து நல்வழிப்படுத்துவர். அத்தண்டம்பெற்றோருக்கு இம்மையிலே அக்கொலைப்பாவம் தீர்ந்துவிடும். மறைவாகக் கொலைசெய்தோரையும், வெளிப்படக் கொலைப்பாவத்தைச் செய்து தண்டிக்கப்படாதோரையும், நரகத்திலே தண்டித்துப் பாவந்தீர்த்து நல்வழிப்படுத்தச் சூரியகுமாரனாகிய யமனை விதித்து மேருமலைக்குத் தென்பக்கத்திருத்தினார். யமன் அஞ்சனமலைபோலக் கரிய சரீரமுடையன். பதினெட்டுக் கைகளையுடையன். பிறைபோலவளைந்த வக்கிரதந்தங்களையுடையன். அக்கினிக் கண்களையும் மேலேறிய புருவங்களையுமுடையன். முட்போன்ற ரோமங்களையுடையன். மீசைபொருந்திய முகத்தையும் துடிதுடிக்கின்ற உதடுகளையும் மகாமேருமலைபோன்ற உயரத்தையுமுடையன். அவன் தண்டாயுதம் முதலிய கொடிய ஆயுதங்களைத் தரித்துக்கொண்டவனாய், சிவந்த வஸ்திரமுடையவனாய், சிவந்த மாலையுடையவனாய், இடியேறுபோன்ற குரலினையுடையவனாய், எருமைக்கடா வாகனமுடையவனாய், மிருத்

தியு, காலன், அந்தகன், மாரி என்பவர்களாற் சூழப்பட்டு நடுவே வீற்றிருப்பான்.

வரும்.

மா. சிவராமலிங்கம்பிள்ளை
ஆறுமுகநாவலர்வாசிகசாலை
வண்ணார்பண்ணை.

---

உ

சிவமயம்.

# * தமிழ்மொழி.

கல்வி கேள்வி அறிவு முதலியவற்றால் மேம்பட்ட கனவான்கட்கும் இச் சபைக்கு நாயகமாய் விளங்கும் சபாநாயகர் அவர்கட்கும்:—

நமது சைவ சமயாபிவிருத்தி சபையின் வருடோற்சவம் முட்டின்றி முடிவெய்துதற் பொருட்டும், யாம் செய்யத்தொடங்கிய உபந்நியாசம் செவ்வனே நடைபெறுதற் பொருட்டும், "எடுத்துக்கொண்ட காரியம் இடையூறின்றி இனிது முடிதற் பொருட்டுச் செயற்பாலதென"ச் சைவ சமயிகளால் தொன்று தொட்டு மேற்கொள்ளப்பட்டு வரும் அரிய வழக்கத்தினைக் கைக்கொண்டு விநாயகக்கடவுள் வழிபாடாய

முகமதியுங்கட்கடுவுங்களவளையும்முத்தரியமுகபடாத்துப். புகர்மதமாமழகளிறுங்காமலர்க்கற்பக தருவும்பொருவில்பாதத். திகழுறுபங்கயநிதியுந் தோன்றுபரைப்பாற்கடலிற்சிறந்துதோன்று, முக லருமைங்கரவமுதை யுளங்குளிரப்பூரித்தேயுவகை பூப்பாம்.

என்னும் வழிபாட்டினை ஈண்டுக் கூறுவாம்.

விநாயக வாழ்த்துகள் பலவிருக்க இதனை எடுத்துக் கூறியதற் கியைபு என்னை யெனின், சந்திரன், ஆலாலம், சங்கநிதி, வெள்ளையானை, கற்பகம், பதுமநிதி என்பவற்றோடு பாற்கடலிற் றோன்றி. மண்ணவரை யொழித்து விண்ணவர்க்கு மாத்திரம் உடற்குறுதி பயக்கும் அமுதம் போலாது யாவர்க்கும் ஒரு பெற்றித்தாய் இனிமையோடு உயிர்க்குறுதி பயந்துநிற்கும் தமிழ், திருமுகமாகிய மதியும் கண்ணாகிய ஆலாலமும் கண்டமாகிய சங்கநிதியும், உத்தரியமாகிய முகபடாமணிந்த தனமாகிய யானையும், கரங்களாகிய கற்பகமும், திருவடிகளாகிய பதும நிதியும் தோன்றும் பரையாகிய பாற்கடலிற் பிறந்த விநாயகராகிய அமுதத்தோடு ஒருபுடை யொத்தலின் என்க.

இனி, எடுத்துக்கொண்ட விஷயத்தைச் சொல்லுவதற்குமுன் யாதுகாரணம்பற்றி யாம் இவ்விடம் வர நேர்ந்தது என்பதைக் கனவான்கட்கு அறிவிப்பது அவசியமாகத் தோற்றுகின்றமையின் அதனை அறிவிப்பாம்.

சென்ற கும்பமாதத்தில் நமது சபையின் காரியதரிசி அவர்கள் இவ் வருடோற்சவக் கொண்டாட்டத்தில் "தமிழ்" என்னும் விஷயத்தைப்பற்றி உபந்நியாசிக்குமாறு எம்மை வேண்டி எழுதியதோடு பிரசங்கிக்கச் சம்மதித்திருந்த ம-ா-ா-ஸ்ரீ. கே. சுந்தரராமையர் அவர்கள், நல்லசாமிப்பிள்ளையவர்கள். சவரிராயபிள்ளை யவர்கள் முதலிய கல்விமான்களின் பெயர்களையும் குறிப்பித்து மெழுதினார். எமக்குப் பரிச்சயமில்லாத அவர் எழுதியதை வாசித்தவளவில் மேற்கூறிய பேரறிஞர் முன்னர் யாது சொல்வது என்னும் நாணமும் உண்மையோ தவறோ யாதேனு மொன்றினைச் சொல்லிவிடின் விஷயதானம் புரிந்தாரோடு ஒருங்குவைத்து எண்ணப்படலாமே என்னும் ஆசையும் உண்டாயின. உண்டாகவே "இகழ்தர எழுந்த நாணும் இச்சையும் தினம்போராடி. அகழ்தர நாணந்தோற்றது ஆசையே வென்றது" என்றபடி ஆசையே வென்றது. வெல்லவே "வளர்மதியின் மேலாய, பெரிய வரை யடைந்தொழுகப் பெறிற் றூறக்கம் பெறல்" அரிதன்று என்னுந் துணிபினைப் பற்றுக்கோடாகக் கொண்டு இவணடைந்தனம், நிற்க.

தமிழ் மொழி என்பதற்குத் தமிழ்ப் பேச்சு என்பது பொருள். பேச்சு என்னும் பெயர் அதைக் குறிக்கும் பாஷைக்குக் காரணக் குறியாய் அப் பாஷையை யுணர்த்தி நின்றது. அண்டசம், சுவேதசம், உற்பிச்சம், சராயுசம் என்னும் நால்வகைப் பிறப்புவாய்ப்பட்டு இப் பூமண்டலத்தில் பிறக்கும் ஆன்மகோடிகளுக்குள் நமக்குக் கிடைத்திருக்கும் மானிடப் பிறவியே மேலானது என்பது எல்லோ

---

* இது. மதுரை நான்காம் தமிழ்ச்சங்கத் தாபகரும் பாலவனத்தம் ஜமீன்தாருமாகிய ஸ்ரீமான். போ. பாண்டித்துரைச்சாமித்தேவர் அவர்கள் அக்கிராசனத்தின்கீழ் ௧௯௧௦-ம் ஹு வைகாசிமீ பாளையங்கோட்டையிற் கூடிய சைவசமய அபிவிருத்தி சபையின் ௨௪-வது வருஷாந்தக் கூட்டத்தில் தஞ்சாவூர் ஸ்கூல் இன்ஸ்பெக்டர் ஆபீசில் ஹெட் கிளாக் உத்தியோகத்தில் அமர்ந்திருக்கும் ஸ்ரீமத். சே. சிவஞானம்பிள்ளை அவர்கள் செய்த உபந்நியாசம்.

பா—ர்.

ர்க்கும் ஒப்ப முடிந்ததே. ஆறறிவுயிராம் மக்கள் தாங்கள் எண்ணிய எண்ணத்தைப் பிறர்க்கு அறிவித்தற்குக் கருவியாயிருப்பது மொழி—அம்மொழிகள் பல ஒருங்குசேர்ந்து பொருள்படுவதே பாஷை. அப்பாஷையை ஆதியில் பெற்றார் சிலர்; பிறகு பெற்றார் பலர்; இன்னும் பெறுதார் அளவிறந்தோர். தமிழ் அநேக நூற்றாண்டுகட்கு முன்னரே தோன்றித் தனித்தியங்கும் ஆற்றலுடையதோர் அரிய பாஷை. அதன் இயல்பை விரித்துக்கூறுவதற்கு முன் அது எக்காலத்தில் எங்கிருந்து யாவரால் இவ்விந்தியதேயத்தை எய்திற்றென்பதையும் எவ்வளவுதூரம் பரவியிருந்ததென்பதையும் ஆராய்தல் இன்றியமையாததன்றோ?

பல்லாயிரம் ஆண்டுகட்கு முன் இவ்விந்திய நாடு முழுவதும் காடடர்ந்த நிலமாக இருந்ததெனவும், அக்காலத்தில் நகர், ஊர்முதலிய பாகுபாடுகளிருந்ததில்லையெனவும், இங்குமங்கும் காட்டுமனிதர்கள் விலங்கேபோல் குகைகளில் வசித்திருந்தார்களெனவும் அவர்கள் காய்கனிகளையும், பன்றி மான் முதலியவற்றின் இறைச்சிகளையும் கற்கருவிகளால் அறுத்து உண்டு வாழ்ந்தார்களெனவும் அவர்கள் அக்காரணம்பற்றிக்கற்காலமனிதர்என்னப்பட்டார் எனவும் சரித்திர ஆராய்ச்சியுடையோர் தெள்ளிதிற் கூறுகின்றனர். இவ்வாறு நாள்பலசெல்லக் கற்கால மனிதர்கள் சிறிதுசிறிதாக நாகரீகமடைந்து தாங்கள் உறைவதற்கெனச் சிறுசிறு குடிசைகள் அமைத்துக்கொண்டனர். இரும்பு முதலிய உலோகங்களின் உபயோகத்தையும் நாளடைவில் அறிந்துகொண்டு தங்கட்கு இன்றியமையாதனவாகிய கோடரி, ஈட்டி முதலியவைகளையும் உண்டாக்கிக்கொண்டனர். இக்காரணத்தால் கற்கால மனிதர்கள் என்னும் பெயர்நீங்கி உலோக கால மனிதர் என்னும் பெயரினைப் பெற்றவராயினர். இவர்களே இந்தியாவில் ஆதிகாலத்திருந்தவர்கள். இவர்களையே தமிழர்கள் துரத்தி அவர்கள் நாட்டைக் கைப்பற்றியது. தமிழர்கள் வருவதற்கு முன்னரே நாகர் என்னும் ஒரு வகுப்பினருட் சிலர் இக்காட்டு மனிதர்களைத் துரத்தி இந்தியாவின் சிலபாகங்களில் வாழ்ந்திருந்ததாகவும் புலப்படுகின்றது.

தமிழர்கள் ஆதியில் இமயமலைக்கு வடக்கிலுள்ள மத்திய ஆசியாவில் வசித்திருந்தார்கள். அவ்விடத்தில் குளிர் பொறுக்க முடியாதிருந்தமையானும் நிலம் கற்பாங்காயிருந்தமையானும் ஆறுகள் அதிகமாக இல்லாதிருந்தமையானும் தானியம் முதலியவைகளின் விளைவு குறைவாக இருந்தமையானும் தங்கட்கும் தமது கால் நடைகட்கும் உணவைத் தேடி ஊர் தோறும் திரிவாராயினர். இவர்கள் நேபாளத்தைச் சார்ந்துள்ள கணவாய்களின் வழியாய் இந்தியாவையடைந்து அதன் நீர்வள நிலவளங்களைக் கண்ணுற்று அளவிறந்த மகிழ்ச்சியடைந்து கங்கைநதியின் சமவெளியில் முதல்முதல் குடியேறினர். கங்கைநதிக்கரையிலுள்ள தமிழுந்தி அல்லது தமிழுக்கு என்னும் துறைமுகப் பட்டணத்தில் நிலைத்துப் பிறகு பற்பல நாடுகளில் குடியேறினமையின் தமிழர்கள் எனப்படுவோர் என்பது சிலர் துணிபு. இந்தத்தமிழர்கள் தான் உலோககால மனிதர்களையும் நாகர்களையும் துரத்தி இந்தியாவைக் கைப்பற்றினதாகக் காண்கின்றது. நாளடைவில் இவர்கள் கூட்டம் கூட்டமாக இந்தியாவில் குடியேறினார்கள். இவர்களில் முதல் முதல் வந்தோர் மாறர் எனப்படுவோர். அவர்களது அரசன் அதுகாரணம்பற்றியே மாறன் என்றும் முதலில் குடியேறினமையின் "பழையன்" என்னும் பேர் புனைந்தான். இதனை,

> "மழை யொழுக் கறுஅப் பிழையா விளையுட்
> பழையன் மோகூர வையகம் விளங்க"

என்னும் மதுரைக் காஞ்சி வலியுறுத்தும். தமிழ் நாட்டு மூவேந்தருள் பாண்டியராவார் இவரே. மாறர்கட்குப் பின்வந்தோர் திரையர். இவர்கள் அரசன் இருநிலங்கடந்த திருமால் வழித்தோன்றினவன் என்றும் இவ்வழிவந்தோரே காஞ்சிநகரத்தை யாண்ட ஆரியன் வம்சத்தார்களாகிய சோழர்கள் என்றும் புலப்படுகிறது. இதற்கு,

> "இருநிலங்கடந்ததிருமறுமார்பின்
> முந்நீர்வண்ணன்புறங்கடையந்நீர்த்
> திரைதருமரபினுரவோனும்பல்
> மலர்தலையுலகத்துமன்னுயிர்காக்கு
> முரசுமுழங்குதானைமூவருள்ளும்
> இலங்குநீர்ப்பரப்பின்வளைமீக்கூறும்
> வலம்புரியன்னவசைநீங்குசிறப்பின்
> அல்லதுகடிந்தஅறம்புரிசெங்கோல்
> பல்வேல்திரையற்படர்குவீராயின்"

என்னும் பெரும்பாணாற்றுப்படை சான்று பகரும். திரையர்கட்குப் பின்வந்தோர் வானவர். இவர்கள் முதலில் தென்னிந்தியாவிலுள்ள கொல்லிமலை முதலிய இடங்களில் குடியேறியிருந்ததாகத் தோன்றுகின்றது. இமயமலையில் வாழும் வானவர் என்னும் கூட்டத்தாரை உறவினராகக் கொண்டவர்கள்.

"மாநீர்வேலிக்கடம்பெறிந்திமயத்து, வானவர்மருளமலைவிற்பூட்டியவானவர்தோன்றல்"

என்னும் சிலப்பதிகாரக்கூற்றும் இதனை வலியுறுத்துவான் எழுந்ததுபோலும். இவர்கள்தான் சேரர் எனப்படுவார். இவர்கட்கு இக்காரணம்பற்றியே வானவரம்பர் என்னும் பெயரும் அமைந்ததாகத் தோற்றுகின்றது. மாறர், திரையர், வானவர் ஆகிய மூவேந்தரும் முறையே பாண்டியர், சோழர், சேரர் எனப் பெயர்பூண்டு மூன்று தமிழ் நாட்டை ஏற்படுத்தி அரசுபுரிந்த இருநிலை மன்னராவார். கிறிஸ்து பிறக்க மூந்நூறு வருடங்கட்குமுன் மகததேசத்தையாண்ட அசோக சக்கிரவர்த்தி ஏற்படுத்திய ஆக்கினைபத்திரங்களினால் தமிழ்நாட்டு மூவேந்தரும் தன்அரசாட்சிக்கு உட்பட்டவர்கள் அல்லரென்பதும் வேற்றரசர்கட்குத் திறைசெலுத்தாமல் தத்தம் நாட்டை அரசுசெலுத்திய பெருவேந்தர்கள் என்பதும் புலப்படுகின்றது.

மேல் எடுத்துக்காட்டியவாற்றால் அனேக நூற்றாண்டுகட்குமுன் இவ்விந்தியாவில் குடியேறினரென்பது சரித்திர ஆராய்ச்சி முறையிற் போதருகின்றது. இதுவேயன்றிச் சேரமான் பெருஞ்சோற்று உதியன் சேரலாதான் என்னும் சேரநாட்டுத்தமிழரசன் பாரதப் பெரும்போரில் பாண்டவர் துரியோதனாதிய ரென்னும் இருதிறத்தினர் சேனைகட்கும் உணவளித்தானென விளங்குகின்றது. இதனை

"ஒரைவ ரீரைம் பதின்மருடன் றெழுந்த
போரிற் பெருஞ்சோறு போற்றாது தானளித்த
சேரன் பொறையன் மலையன் றிறம்பாடிக்
கார்செய் குழலாட வாடாமோ வூசல்
கடம்பெறிந்த வாபாடி யாடாமோ வூசல்"

என்னும் சிலப்பதிகாரச் செய்யுளும்

"நின்கடற் பிறந்த ஞாயிறு பெயர்த்துநின்
வெண்டலைப் புணரிக் குடகடற் குளிக்கும்
யாணர் வைப்பின் நன்னாட்டுப் பொருந
வானவரம்பனை நீயோ பெரும
அலங்குளைப் புரவி யைவரொடு சினைஇ
நிலந்தலைக் கொண்ட பொலம்பூந் தும்பை
யீரைம் பதின்மரும் பொருதுகளத் தொழியப்
பெருஞ்சோற்று மிகுபதம் வரையாது கொடுத்
தோய்"

என்னும் புறநானூற்றுக் கவியும் இனிது விளக்கும். இச்செய்யுட்களால் பாரதயுத்தம் நடந்த காலத்திலேயே இவ்விந்தியாவில் தமிழ் பரவியிருந்ததென்பதும் ஒருதலையன்றே. இம்மட்டோ, சீராமபிரான் தன் சிற்றன்னையின் பணியைச் சிரமேற்கொண்டு பதினான்கு வருடம் வனவாசம் செய்வான் சென்றபோது பொதியமலையில் வீற்றிருந்த அகத்தியரைக் கண்டதாகவும் அப்போதே இவ்விந்திய நாட்டில் தமிழ் நடைபெற்றதாகவும் கீழ்வரும் இராமாவதாரச் செய்யுள் சான்றுபகரும்.

"நின்றவனை வந்தநெடி யோனடிப ணிந்தான்
அன்றவனு மன்பொடுத ழீஇயழுத கண்ணன்
நன்றுவர வென்றுபல நல்லுரைப கர்ந்தான்
என்னுமுள தென்றமிழி யம்பியிசை கொண
டான்"

வரும்.

சே. சிவஞானம்பிள்ளை.

---

# புத்தக வரவு.

## இரகுவமிசக்கருப்பொருள்.

இரகு வமிசம் என்பது இரகு எனப்படும் சூரியகுலத்தரசனுடைய மரபிலுள்ளார் கதையை, வான்மீகராமாயணத்தின்படி காளிதாசமகாகவிச்சக்கிரவர்த்தியினால் வடமொழியிலே இயற்றப்பட்டதொரு காப்பியம்.

இதனை வடமொழியினின்றும் தென்மொழியிற் பெயர்த்துக் காப்பிய இலக்கணங்களமைய விருத்தயாப்பினாலே செய்தவர், யாழ்ப்பாணத்து நல்லூரிலிருந்து அரசியல்புரிந்த பரராசசேகரமகாராசவின் மருகரும் மகாவித்துவானுமாகிய அரசகேசரி என்னும் கவிச்சிரேட்டர். சரித்திரமேயன்றி வருணனைகளும் வடமொழி முதனூலோடு மாறுபடாவண்ணம் மொழிபெயர்த்துப் பாடிய இவ்வாசிரியருடைய வடமொழி தென்மொழிக் கல்வித் திறமையைக் குறித்துப்புகழ்ந்து பாராட்டாதார் தமிழ்ச்சுவை நுகர்பவர்களுள் யாவர். இந்நூல் ஆசிரியரால் திருவாரூரிலே அரங்கேற்றப்பட்டது.

இவ்வரிய தொடர்நிலைச்செய்யுள் யாழ்ப்பாணத்து நல்லூர் ஸ்ரீலஸ்ரீ. ஆறுமுகநாவலர் அவர்கள் மருகரும், மாணாக்கருமாகிய வித்துவசிரோமணி ஸ்ரீமத். ந. ச. பொன்னம்பலபிள்ளை அவர்களால் பரிசோதித்து யாழ்ப்பாணத்திலே அச்சிடப்பட்டது.

இத்தமிழ் இலக்கியத்திலே காணப்படும் பிரயோகங்களையும் புதைபொருட் சுவைகளையும், தொல்காப்பியம், சிந்தாமணி, சூளாமணி, சிலப்பதிகாரம், கம்பராமாயணம், கலித்தொகை முதலிய தமிழ் நூல்களிலே வல்லுனராய், வடமொழிப் பயிற்சியு

முடையோரே திரிபின்றி ஆசிரியர் கருத்துடன் முரணுறாது கண்டறியும் ஆற்றல் உடையோராவர்.

இந்நூலின் கார்க்கச நடையினியல்பினை நோக்கி, யாழ்ப்பாணம் நல்லூர் நீதிபதி ஸ்ரீமான். கு. கதிரைவேற்பிள்ளை அவர்கள் வேண்டிக்கொண்டவாறே, வண்ணைச் சைவப்பிரகாசவித்தியாசாலைத்தலைமை உபாத்தியாயரும், மதுரை யாழ்ப்பாணத் தமிழ்ச்சங்கப்புலவரும். தமியேனது அஞ்ஞானமாகிய இருள் ஓட்டெடுப்ப, தமது கல்விஞானமென்னும் சலாகையினலே, எனது கண்களைத் திறந்து காட்டி, தமிழ்ச்சுவை ஊட்டி நுகர்வித்த. எமது அருமைத் தமிழாசிரியருமாகிய சுன்னகம் ஸ்ரீமத். அ. குமாரசுவாமிப்புலவர் அவர்களால் எளிதிற் பொருள் புலப்படாதனவாய் அரிதுணர்தற்பாலனவாகிய முந்நூறு கவிகளுக்கு மாத்திரம் ஓர் சிறந்த உரை எழுதப்பட்டுள்ளது.

இவர்கள் எழுதித்தந்த இவ்வுரைநடையமையின் வைசித்திரியம், பழைய நூலுரைகளிற் பயிற்சியுடைமையோடு, பாவங்களையும் சாராம்சங்களையும் இரசங்களையும் கிரகித்து ஆநந்திக்கும் கல்வியின் துறைகளை அடுத்துக் கைபோகிய கவிஞர்களாலே மதித்துப் பாராட்டப்படற்குரியன வன்றி என்னை ஒப்பார் ஒருசிலரால் எண்ணவும் படுமோ என்க.

இவர்களுரையிலே சிலகவிகளுக்குப் பதவுரையும், சிலகவிகளுக்குப் பதவுரையோடு விசேடவுரையும், சிலகவிகளுக்குப் பொழிப்புரையும். சிலகவிகளுக்குக் கருத்துரையும், சிலகவிகளுக்குச் சரித்திரமும், சிலகவிகளுக்கு அந்நுவயமாத்திரமும். சிலகவிகளுக்கு. அருஞ்சொற் றொடர்க்குப் பொருளும், சிலகவிகளுக்கு, அருஞ்சொற்களுக்குப் பொருளுமாக, வேண்டிய அளவு பொருள் விளக்கப்பட்டுள்ளன. பலகவிகள் முதனூலோடாராய்ந்து நூலாசிரியர் போக்கினையும் நோக்கினையும் முற்றுறக்கருதி முட்டின்றி முடிக்கப்பட்டுமுள்ளன.

இவ்வுரையின் சுருக்கமும் தெளிவும் இனிமையும் ஒருமுறை விரையாதேகி. உய்த்து நோக்குவார்க்கே புலனாகும். அணிகளின் அமைவும் விரித்துக் காட்டப்பட்டுள்ளன.

இன்னும் இவ்வுரை முடிபுகளைத்தெரித்து. இலக்கணங்கள் அமைந்து கிடக்குமாற்றை விரித்து. உறுப்பின் இயைபுகள் தோன்றப் பகுத்து நிச்சயஞ்செய்து, பொருளை வரையறுத்து, அத்தற்கின்றியமையாதனவற்றைப் பண்டைநூலுரைகளினின்றும் மேற்கோள்கள் எடுத்துக்காட்டி. இடையிடையே பெயர்க் காரணங்களை விளங்கவைத்து. இதற்கு இது என விரைவிற் புலப்படுமாறு முடிவிடங்காட்டிச் செல்லும் விழுப்பம் வாய்ந்துள்ளது

இந்நூலிலே தேருந்தோறும் இனிமை பயக்கும் சீரியன இக்கவிகள் எனப் புலவரவர்களால் சிலகவிகள் வேறாக எடுத்துக் காட்டவும்பட்டுள்ளன. அருஞ்சொற் பொருள்கோள்களும். அருந்தொடர்ப் பொருள்கோள்களும் எழுதப்பட்டுமுள்ளன.

இத்துணைச்சிறப்பும் அருமையும் வாய்ந்துள்ள செவ்விய உரையினை எழுதி. தமிழுலகிற்குபகரித்த புலவர்களது வடமொழி தென்மொழிக் கடலை ஆய்ந்தே கடந்த கல்வியின் திறமை, தமியேன் எடுத்துக்காட்ட இவ்வுலகம் அறியும் புதுமையுடையது மன்று.

இன்னும் இந்த யாழ்ப்பாணமாகிய செந்தமிழ்ச் செல்வி, ஸ்ரீலஸ்ரீ. ஆறுமுகநாவலரவர்களையும். அவர்கள் மருகரும் மாணாக்கருமாகிய, வித்துவசிரோமணி ஸ்ரீமத். ந. ச. பொன்னம்பலபிள்ளை அவர்களையும் இழந்து பரிதபிக்கும் நிலைமையுடையளேயாயினும், அக்குறைவுடைமை. வெளிப்பட அவட்குப் புலப்படாமைக்குக் காரணம். அவள் செய்து கொண்ட தவப்பயன்போன்று. பெருங்களைகணாகி உற்றவிடத்துதவி அவளைக் காத்து நல்கும் நம்புலவர்பெருமானவர்களாலேயே. என்று அறிஞர்கள் பலரும் பாராட்டுவாராயின் நாம் சொல்லக்கிடந்தன வேறு யாவுள.

ஆதலால் இவ்வுரைநூல் கற்று வல்லுனர்க்கும். கற்கப் புகுவோர்க்கும் இன்றி அமையாது வேண்டப்படுவதொன்றே என்பது, தானே அமைந்து நிற்கின்றதென்க.

இ. ன் விலை அணா ௩. (சதம் உரு)

சைவபாலபோதம்.

இது. சைவசமய இயல்புகளும், பதி பசு பாச இலக்கணங்களும். புண்ணிய பாவங்களின் தன்மைகளும் மறுபிறப்பினுண்மையும், இம்மை மறுமைப் பயன்களும், விக்கிரகவணக்கத்தின் தத்துவார்த்தமும், கடவுள் வழிபாட்டின் இன்றி அமையாமையும், அதற்குரிய வழிகளின் திறங்களும், நித்திய கருமவிதிகளும், சிவாலய தரிசன முறைகளும். சிவபூசையின் சூக்குமார்த்தங்களும், வேதாகம புராணேதிகாசாதி சாஸ்திரங்களின் சாராம்சங்களும் சைவ சித்தாந்த சாஸ்திரங்களின் மாண்பும்

பிறவும், சமயநூல்கள் கற்கத்தொடங்கும், மாணவர்களின் உள்ளங்களிலே, அமைவுடன் நன்கு பதிந்து பின் பிறழ்வுறாவண்ணம், இனிய இயற்சொற்கள்கொண்டு, வினாவிடைமுகத்தால் கற்பித்துப்பயப்பய நன்று அழுத்திவிடும் விழுப்பம்வாய்ந்து சைவசித்தாந்தநூல்களின் பாயிரம்போன்று கத்திய நடையில் விளங்கும் அரியநூல் ஆதலால், திராவிட ஆங்கிலேய சைவகலாசாலைகளிலே, கற்பிக்கப்படுதற்குரியதேயாம் என்பது மிகைபடக்கூறாதலாகும்.

ஆங்கிலேய கலாசாலைகளிலே மேல்வகுப்புகளிலே பயிலும் மாணவர்கள் பொருட்டு, இது ஆங்கிலேய பாஷையிலே மொழிபெயர்க்கப்படின், மிகவும் உபயோகமாகும்.

இத்துணைச் சிறந்த இந்நூலை இயற்றியவர்கள், மதுரை. யாழ்ப்பாணத் தமிழ்ச்சங்கப் புலவரும், ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரவர்களின்பின், செந்தமிழிலே வசனநடை எழுதுவதில், முதன்மை படைத்தவரும் ஆகிய ஸ்ரீமத். ஆ. முத்துத்தம்பிப்பிள்ளை அவர்கள்.

இன்னுமிவர்கள் அபிதானகோசம், நன்னூல் இலகுபோதம், பாரதச்சுருக்கம், பாலபாடங்கள், இங்கிலீஷ் அகராதி, (ஆங்கிலேய பதங்களுக்கு அப்பாஷையிலும் தமிழிலும்பொருள்விளக்குவது.) என்றித்தொடக்கத்தனவும், இவைபோல்வனவுமாகிய சிறந்தநூல்களை இயற்றி, தம்கல்வி அறிவின் பயனை உலகினர்கொண்டு இன்புறச் செய்துதவும் லோகோபகாரமாகிய பெருநன்றி, தமிழுலகினரால் என்றும் மறவாது பாராட்டிப் போற்றப்படுதற்குரியதேயாம்.

இது நூலாசிரியரவர்களால் தமது "நாவலர்" அச்சுக்கூடத்தில் பதிப்பிக்கப்பட்டிருக்கின்றது.

விலை சுநம் சுஉ.

## இந்துமத தூஷணையின் பரிகாரம்.

மதுரை பிரஹ்ம ஞானசபையைச் சேர்ந்தவரும் "பூரணசந்திரோதய"ப் பத்திராதிபருமாகிய, பிரமஸ்ரீ. ப. நாராயணஐயர். B. A. B. L. F. T. S. அவர்கள், தாமியற்றிய "இந்துமத தூஷணையின் பரிகாரம்" "மனித வமிசாவழியின் உண்மை" "பிராசீன தர்மங்களின் உயர்வும் இக்கால ஆசாரங்களும்", "அன்பு அதன் உண்மை" என்னும் இவ்வரிய செந்தமிழ் நூல்களை எமக்கு அனுப்பி வைத்தார்கள் அவைகளுள் "இந்துமத தூஷணையின் பரிகாரம்" என்னு நூலினைக்குறித்து இம்முறை எழுதுகின்றோம். ஏனையவை அடுத்தமுறைகளில் எழுதப்படும்.

இது அன்னிபிஸன்டு அம்மையார் ஆங்கிலத்தில் எழுதியபடி மேற்படி ஐயரவர்களால் தமிழில் கத்தியரூபமாக மொழிபெயர்க்கப்பெற்று மதுரை விக்டோரியா அச்சாபீசில் பதிப்பிக்கப்பட்டு வெளிவந்தவொரு ஞானநூல். அது பதினான்கு அதிகாரங்களாகப் பகுக்கப்பட்டுள்ளது.

முதலாம் அதிகாரத்தில், விக்கிரகாராதனையும், அது, தியான சாதனலக்ஷியமாய் நிற்குமாறும், அதனால் மனோசங்கல்பசக்தி பதிந்தெழுமாறும், திருவருட்பிரசாதம் உண்டாமாறும், விக்கிரகாராதனை மூலதத்துவ விளக்கங்களும் பிறவும் விபரீதஞானமின்றிப் புலப்பட எடுத்து விளக்கி, ஏனைமதத்தினர் கொள்கைகளோடு சார்த்தி வாய்மைதோன்ற நாட்டப்பட்டுள்ளன.

இரண்டாம் அதிகாரத்தில், நம்மவர் ஓர் கடவுளை அன்றி, பல தெய்வ வழிபாடு செய்பவர்கள் அல்லர் என்பதும், கீழதிகார தேவதைகளினியல்புகளும், அவர்களை வழிபடுதற்காம் காரணங்களும் பிறவும் யுக்திக்கும் நியாயமுறைகளுக்கும் பிறழாவண்ணம் தனித்தனி விரித்து அறிவுறுத்தப்பட்டன.

மூன்றாம் அதிகாரத்தில் மும்மூர்த்திகளது இயல்பும், இவ்வாறு முப்பாலாக பகுப்புற்றுக் காணும் முறைமை மற்றை மதத்தார்களுக்கும் உடன்பாடே என்பதும், சிவபெருமானே எவற்றையும் ஒடுக்கி நிர்விகாரியாய் விளங்கும் பரமபதியென்பதும் பிறவும்விரிக்கப்பட்டுள்ளன.

நான்காம் ஐந்தாம் ஆறும்அதிகாரங்களில், ஸ்ரீகிருஷ்ணமூர்த்தியின் அவதார மகிமைகளும், நிகழ்ந்தகதைகளின் தத்துவார்த்தங்களும், பிறவும் தெளிவிக்கப்பட்டன.

ஏழாம் எட்டாம் அதிகாரங்களில், சிரார்த்தம் செய்யவேண்டுதற்காம் காரணங்களும் அவைகளோடு ஏனைமதக் கொள்கைகள் பெரும்பான்மையும் ஒத்துநடக்குமாறும், இப்பூதவுடம்பினின்று உயிர்நீங்கும் முறைமைகளும், ஜனனத்தினும் ஜனனமே சிறந்ததென்பதும், அபரக்கிரியைகளின் சூக்குமார்த்தங்களும், பிறவும் தடைவிடைகளால் விளக்கிப் புறமதத்தினர் ஒழுக்கங்களோடு தழுவி எழுதப்பட்டன.

ஒன்பது பத்து பதினொன்று பன்னிரண்டு பதின்மூன்றும் அதிகாரங்களில், இந்துமதக்கொள்கைகளும் ஞானநிலையின் உண்மைவிளக்கங்களும் அந்தக்கரணங்களின் அமைவுகளும் பரவசமாக்கும் உபாயமும் (*Mesmerism*) மயக்கம் உண்டு பண்ணுமுபாயமும் (*Hypnotism*) இவைகளின் சாராம்சங்களும் அவைகளுடன் இந்துசாஸ்திரங்களின் கொள்கைகள் பேதமின்றி நடக்கும் ஒற்றுமை நயங்களும், பண்டைக்காலத்திருந்த பிரமஞானிகளின் தத்துவோபதேசங்களும், எம்மதங்களினும் இந்துமதமே ஞானபோதனைகளினாற் சிறந்துள்ளதென்பதும் இவைபோன்ற அனேக நுட்பமாகிய விஷயங்கள் பிறவும் பல்லாற்றானும் எற்புறத்தொகைவகைவிரியால் உணர்த்தும் மாண்பமைந்துள்ளது.

பதினன்காம் அதிகாரத்தில், பரிணமவாத விகற்பங்களும் பிறவும் செவ்வே முடிக்கப்பட்டு ஞானப்பிரகாசம்விளக்கமுறாநிற்கும். விலை அணா ௪.

---

சாத்திரக்கொத்து, சாவித்திரிவெண்பா, தருக்க விளக்கம் என்னும் இந்நூல்களை, தஞ்சாவூர் ஸ்கூல் இன்ஸ்பெக்டர் ஆபீசில் ஹெட்கிளார்க் உத்தியோகத்திலமர்ந்திருக்கும் தமிழ்ப்பண்டிதர் ஸ்ரீமத்.சே.சிவஞானம்பிள்ளை அவர்களின் சகோதரரும் மகா வித்துவானுமாகிய ஸ்ரீமத். சே. சோமசுந்தரம்பிள்ளை அவர்கள் எமதுபார்வைக்கு அனுப்பியிருக்கின்றார்கள். இந்நூல்களைப்பற்றியும் இரங்கோனில் பேப்பர் கறென்சி ஆபீசில் பொக்கிஷதார் ஸ்ரீமான். ராய்சாஹிப் திரிசிரபுரம் ம. பொன்னுச்சாமிப்பிள்ளை அவர்கள் அனுப்பிய கமலாக்ஷியைக்குறித்தும் அடுத்த சஞ்சிகைகளில் எழுதப்படும்.

இவ்வரிய நூல்களை எமக்கு அனுப்பிவைத்த ஆசிரியரவர்களுக்குப் பேரன்புடன் துதிகூறுகின்றோம்.

---

## புதுப்பஞ்சாங்க வரவு.

(ஸ்ரீமத். இரகுநாதையரவர்கள்
சோதிடபரிபாலனமடத்து வாக்கியபஞ்சாங்கம்)

யாழ்ப்பாணத்து நல்லூர் ஸ்ரீமத். இரகுநாதையரவர்களின் தத்தபுத்திரர் பிரமஸ்ரீ. சிவராமலிங்கையரவர்களாலும் பௌத்திரர் பிரமஸ்ரீ. ச. சுப்பிரமணிய ஐயரவர்களாலும் வருகிற விரோதிகிருது வருஷத்துக்குக் கணிக்கப்பட்ட இவ் வாக்கியபஞ்சாங்கத்தின்பிரதியொன்று வரப்பெற்றோம். இது யாழ்ப்பாணத்தில் வெளிவரும் பஞ்சாங்கங்களுள் மிகவும் புராதனமாயுள்ளது. எமக்கு அனுப்பிய பிரதியை மகிழ்வுடன் ஏற்று ஆக்கியோனுக்கு ஸ்துதிகூறுகின்றோம்.

---

## சமாசாரம்.

---

கைதை நகர் முத்துக்குமாரசுவாமி வித்தியாசாலை:—இது பிரமஸ்ரீ. இ. குருசாமிக்குருக்களவர்களால் நடைபெற்று வருகின்றது. இவ்வூரார் அனைவரும் சைவர்களேயாதலின் குருக்களவர்கள் தொடங்கிய ஷை வித்தியாசாலை தளர்வுறாது ஒற்றுமையுடன் யாவரும் ஒருங்குசேர்ந்து உதவி புரிந்து வருவது பெரும் சிவ புண்ணியமாகும்.

கந்தபுராண படனம்:—வித்துவசிரோமணி ஸ்ரீமத். ந. ச. பொன்னம்பலபிள்ளையவர்களின் மருகரும் மாணாக்கருமாகிய ஸ்ரீ. சிவ. இ. மாரிமுத்து உபாத்தியாயரவர்கள் ஸ்ரீகாசி யாத்திரை செய்துவந்து இந்தமாசம் தொடங்கி ஆறுமுகநாவலர்வாசிகசாலையில் கந்தபுராண படனம் செய்துவருகின்றார்கள். தேவாலயங்களிலன்றி, சைவ மடாலயங்களிலும், சைவகலாசாலைகளிலும் கந்தபுராண படனம் இன்றியமையாது வேண்டப்படுமென்பதை, உபாத்தியாயரவர்கள் அனுட்டித்து நடத்திவரும் அருஞ்செயலே முன்னின்றுகாட்டும். நமது நாட்டில் சைவசமயத்தையும், சிவபக்தியையும் வளர்த்து அகால மரணத்திற்கு ஏதுவாகிய கொடிய நோய்கள் தோன்றிப் பரவிநின்று வருந்தாவண்ணம் காவற்றொழில் பூண்டிருப்பது கந்தபுராணபடனமேயாம்.

சைவப்பிரசங்கம்:—இந்த மாசம் ௧௬௨. ஞாயிற்றுக்கிழமை பின்பகல் மூன்று மணிதொடங்கி மானிப்பாய் இந்துகாலீஜிலே தெல்லிப்பழை நியாயப் பிரதிநிதி சிறீமான். தம்பையாபிள்ளை, சிறீமான். அ. குமாரசுவாமிப்புலவர் என்னும் இருவராலும் "மறுபிறப்புண்டு" என்னும் விஷயம், விரிவாயும் விளக்கமாயும் ஆட்சேப சமாதானங்களோடு பிரசங்கிக்கப்பட்டது. "மறுபிறப்புண்டு" என்னும் விஷயத்தைப் பிரசங்கிக்கும்படி கேட்டவர் சிறீமான். அத்துவக்காத்து ச. நடராசா அவர்கள். சபையிலிருந்து பிரசங்கம் கேட்டார் பலர். சிறீமான். தம்பையாபிள்ளை அவர்கள் "மறுபிறப்புண்டு" என்பதற்குச் சைவசித்தாந்தப் பிரமாணம் காட்டி ஆங்கிலேய சாத்திரத்தோடும் அனுமானப் பிரமாணத்தோடும் அது மாறுபாடுறாமலும் தர்க்க முறையில் வேறுபாடுறாமலும் பற்பல நியாயங்கள்

காட்டி யாவர் மனதிலும் இனிது பதியும்படி சாதுரியமாக விளக்கினர். அப்போது தோன்றிய சித்தாந்த சாரங்கள் பல.

பின்னர் பிரமஸ்ரீ. அம்பிகாபதி ஐயரவர்கள் முன்பேசிய உரைகளை அநுசரித்துக் கூறிய குறிப்புரையோடு பிரசங்கமும் சமாப்தியாயிற்று.

சிறீமான். சங்கரப்பிள்ளையவர்கள் ஞாயிற்றுக்கிழமைதோறும் சைவப்பிரசங்கம் நடக்கும்படி ஒழுங்கு செய்திருக்கிறார்கள். அப்படியே பிரசங்கம் நடந்து வருகின்றது. எப்போதுந் தவறாமல் நடந்துவரவேண்டுமென்பது அவர்களுடைய முழு விருப்பம். இறைவனும் அருள்புரிக.

ஓர் சைவ வித்தியாசாலை---ஆனைப்பந்தியடியில் ஓர் சைவ வித்தியாசாலை இந்தமீ உக்வ ஆரம்பமாகி நடைபெற்றுவருகின்றது.

வித்தியாகர்த்தர் அவர்கள்:---இலங்கை வித்தியாகர்த்தர் மெஸ். ஹார்வேட் அவர்கள் யாழ்ப்பாணம் வந்து வித்தியாசாலைகளைப் பார்வையிடுகின்றார்கள்

அருந்தப்பு:---பெரியகடைக் கங்காசத்திரத்திலுள்ள கிணற்றிலே ஒரு சிறுபையன் தவறி வீழ்ந்தான். அக்கிணற்றின் நடுவே இரும்புச் சங்கிலியும், பக்கத்தே இரும்புக்கம்பிகளும் பூட்டப்பட்டும் கோலை செய்யப்பட்டுமிருந்ததினால், வீழ்ந்தும் உயிர்ச்சேதமின்றி வெளியேவந்துவிட்டான். இக்கிணற்றை வெட்டிவித்து இவ்வாறு அபாயநீக்கத்திற்கேதுவாகிய கருவிகளை அமைத்துவைத்தவர்கள் ஸ்ரீ. வை. வல்லிபுரமவர்கள். கிணறுகடோறும் இவ்வாறு அமைக்கப்பட்டிருத்தல் பெருநலமாகும்.

ஓர் புராதன சிவஸ்தலம்:---யாழ்ப்பாணம் மாதகலுக்குச் சமீபமாகச் சம்புத்துறை எனப்படும் ஒரு சிவஸ்தலம் இருந்ததாகத் தக்ஷிணகைலாசமான்மியத்தில் கூறப்பட்டிருக்கின்றது என்றும் அதனால் அவ்விடத்தில் ஓர் சிவாலயம் கட்டுவித்தல் வேண்டுமென்றும் ஷை யூர் பிரமசிறீ. ஐ. சதாசிவக்குருக்களவர்கள் தொடங்கியிருக்கின்றனர். சைவசமயிகள் அதற்குவேண்டிய பொருளுதவியும் பிறவுதவிகளும் செய்து ஆதரித்தல் உத்தமோத்தம சிவபுண்ணியமாகும்.

சீமைசென்று வைத்தியநூற் பயிற்சியில் தேறிய தமிழ்மாது:---நியாயதுரந்தரர் மெஸ். அருளானந்தமவர்களின் சகோதரியாராகிய இவர் யாழ்ப்பாணத்திலே கல்வி கற்று, கற்குத்தா சர்வகலாசாலைப் பிரதம பரீக்ஷையிலே முதல் மாணவகியாய்ச் சித்தி பெற்றவர். பின் ஸ்கொற்லாந்துக்குச் சென்று வைத்தியநூற்பயிற்சிசெய்து தேறி எல். ஆர். சீ. பீ. பட்டம் பெற்றிருக்கின்றார். இவர் பெயர் மாது ஸ்ரீ நல்லம்மா என்பது. பெண்மணிகளுள் நம்மூரினின்றும் முதல்முதற் சீமைசென்று கற்றுத்தேறியவர்கள் இவர்களேயாகும்.

யாழ்ப்பாணம் வண்ணைநகர் ஸ்ரீ. விசுவலிங்க வைத்தீஸ்வரசுவாமி கோயில்-யாழ்ப்பாணம் நகரத்து செட்டிப்பிள்ளைகள் "டிறஸ்றி" தத்துவம் வாங்கிக்கொண்டு இச்சிவாலயத்தை சிலவருடங்களாகப் பராபரித்து வந்தார்கள். ஷை கோயில் ஆதனங்களுள் சில நகரத்தார் வசமும் சில ஷை கோயில் எஜமானும் மானேசருமாகிய ஸ்ரீமான். பொ. க. பொன்னுச்சாமிச்செட்டியாரவர்கள் வசமுமாக இருந்தமையினால் ஷை கோயிலாதனங்களைக் குத்தகை வாரம் வாடகை என்னும் இவைகளால் அநுபவித்து வருபவர்களுள் ஒருசிலர் ஒழியப் பெரும்பான்மையோர் இவ்விருதிறத்தினருக்கும் குத்தகைப்பணம் நெல் முதலியவைகளைக் கொடுத்தலின்றி, அவ்வவ் அமையங்கட்கேற்ப வருவார்க்கொவ்வொன்றுகூறி தாம் பெரும் இலாபமடைந்துவந்தார்கள். ஆதலால் கோயில் எசமானவர்களுக்கும், பராபரித்துவந்த நகரத்தாருக்கும் கிரமமான வரும்படி இல்லாமல் போயிற்று. இவர்கள் எவற்றையும் அநுபவத்தால் நன்று உணர்ந்துகொண்டார்கள் ஆதலினல் எவைகளையும் தம்முள் ஆலோசித்து எசமானவர்களை அழைத்து ஷை கோயில் பராபரிப்பையும் தங்கள்வசமிருந்த ஆதனங்களையும் ஒப்புவித்துவிடுவதாக நகரங்கூடித் தீர்மானித்துவிட்டார்களாம்.

இன்றும் இக்காலமே வேளாண்மை அறவிடுங் காலமானபடியினால் நகரத்தார் ஷை எசமானவர்களோடும் தங்கள் கணக்கப்பிள்ளையையும் அனுப்பி இருபகுதியாரும் இணங்கி ஒருமித்து வரும்படிகளை அறவிட்டுக்கொண்டுவருவதாகவும் கேள்வி. அவரவர்களுக்கு அவரவர் சார்பினர்போலக்காட்டி ஒருவர்க்கும் ஒன்றும் கொடுத்தலின்றிக் காலங்கழித்துவந்தவர்களுக்கும் எசமானர்களை அறியாமல் ஏதோ ஒன்றைச்சொல்லி இரகசியமாய்ப் பணம் அறவிட்டுத் திரிந்துவந்த ஷை கோயிலிலுள்ள கீழ்க்காரியத்தர்களுக்கும் நடந்துவந்தகாலம் இனி அஸ்தமனமாயிற்று. ஒருவருக்குமின்றி அநியாயமாய்ப் போயொழிவதன்முன் ஆலோசித்து எசமானவர்களோடு இணங்கிக் கோயிலையும் ஒப்புவிக்க உடன்பட்ட செட்டிப்பிள்ளைகளின் குணம் செயல்கள் எவராலும் பாராட்டப்படற்குரியனவேயாம். எவற்றினும் மேம்பட்டது சிவபுண்ணியப்பேறே என்று துணியும் இயற்கைக்குணம் பூண்டோராதலின் செட்டிப்பிள்ளைகள் கோயில் விஷயத்திலே ஒன்றையும் பாராட்டாது உதவிபுரிந்துவருவாரென்றே காத்திருக்கின்றேம். என்னை? "அவிர் திருப்பணிகள்செய்யா ஆலயம்பிறவுமில்லை." என்பது சான்றோர் வாய்மொழியாதலினால். கடிதன்.

உ

கணபதிதுணை.

திருச்சிற்றம்பலம்.

சைவாசாரியராகிய

# நிரம்பவழகியதேசிகர்

அருளிச்செய்த

# சேதுபுராணம்.

காப்பு.

திங்களங்குழவியென்னத்திகழொருமருப்பிற்சோதி
தங்குகிம்புரிவயங்கத்தடாமணிமகுடந்தாங்கித்
துங்கநல்வரங்கணல்குந்தூயசிரிராமசேதுப்
புங்கவர்வணங்கும்யானைமுகத்தனைப்போற்றல்செய்வாம்.

இதன்பொருள். இளம்பிறை போலத் திகழாநின்ற மருப்பின்கண்ணே கிம்புரியானது விளங்க மகுடம் தாங்கி வரங்கள் நல்கும் யானைமுகத்தனைப் போற்றல் செய்வாம் என்றார் என்க.

ஞானரூபியாகிய ஐங்கரக்கடவுள் திருமுடியிற் சூடியருளுமியைபி றானும் அவர்தாமே திங்களின் வடிவெனத் திகழுமுண்மையானும், "திங்க ளங்குழவி" என்று ஆசிரியர் தொடக்கம் வேண்டுவாராயிற்று என்பது. அவ்வியைபினை

"கீற்றுவான்மதிக்கண்ணியுங்கேழ்கிளரகலத்
தூற்றுதேமலர்க்கொன்றையுமலசெலர்கொடியி
னீற்றுநீவிழிப்பாலமுநிறைந்தபேரழகுந்
தோற்றிநேரெதிர்நின்றவச்சுரூபனைக்கண்டாம்."

"கிரணபந்தியாற்பயிரையுங்கிளர்சுவைப்பெருக்காற்
பரவுதேவர்கடம்மையுமகிழ்வித்துப்பார்ப்பார்க்
கரசனுயுலகத்துவெப்பறுத்திடுந்திங்கட்
சுருவமாகியகணேசர்நின்றிணையடிதொழுதாம்."

என வருவனவற்றால் அறிக.

"திங்களைப்போற்றுதும்" எனச் சிலப்பதிகாரத் தொடர்நிலைச்செய்யுட் குஞ் சிறந்த மங்கல முதன்மொழியாக எடுத்துக்கொள்ளப்பட்டது மிது.

மணிகொள் கிம்புரி என்பார் சோதி தங்கும் என்றார். கிம்புரி - கொம்பி லணியும் பூண். தடாமணி - பெருமைபொருந்திய மணி. "தட" என்னும் உரிச்சொல் ஈண்டுப் பெருமைப்பொருளின்மேற்று; விகாரம். "தடாமணி" என்பது கல்லாடம் (ம.) இராமசேது - ஸ்ரீராமராற் கட்டப்பட்ட அணை.

"வயங்க மகுடந் தாங்கி வரங்கள் நல்கும் யானைமுகத்தன்" என்பதினால் இறைவர், சார்பினாற்றோன்றாது தாம் அருவாயெப்பொருட்குஞ் சார்பென நிற்குந் தமது அத்துவிதமாமியல்பு ஆன்மாக்களான் மனமொழி மெய்கள்கொண்டு அளவிடற்காகா அறிவிறந்த நிலைமையதாதலின் மெய்யடியார்விடர்தீர்த்து வரந்தந்தாண்டருளவே குணமொடு குறிபலகொள்ளுந் திருமேனி கொண்டருளுவர் என்பது உணரவைத்தவாறாயிற்று.

"குணமொடுகுறிபலகொள்கைகொள்ளாயெனி
னணிமலர்மணமெனவாக்கையினுயிரெனப்
பணியுபிரறிவெனப்பயிலுமத்துவிதமாங்
கணபதிவினதியல்காணவல்லாரெவர்."

என்பதூஉம் இப்பொருட்டு. (௪)

தொடர்கின்றவிடுக்கண்வெற்புத்துகள்படத்துளைக்குமேலோ
னடர்கின்றவதற்குநாதனாகியவைங்கைமுக்கட்
படர்வென்றிப்பகவன்முன்னைப்பவமுதற்பகைவினெல்லா
விடர்கின்றும்புரக்கவெம்மையெங்கணுமெந்நாளும்.

இ—ள். மேலோனும் நாதனும் ஆகிய பகவன் எம்மைப் புரக்க என்றார் என்க.

செய்த உடம்பு அழியவுந் தான் அழியாது உயிரோடொன்றிச் செல்லுதிச்செல்லுந் தீவினையின் பயனாக இடுக்கண் நுகரப்படுதலானோக்கித் "தொடர்கின்ற இடுக்கண்" என்றார். மலையேபோன்று துளக்கலாகாநிலையினவாம் பெருந் தோற்றத்ததாயினும் அது அணுவளவினதாகத் தேய்ந்தொழியச் செய்தருளும் வரம்பிலாற்றலுடையவர் என்பது "தொடர்கின்றவிடுக்கண்வெற்புத்துகள்படத்துளைக்குமேலோன்" என்பதனாற் பெறப்பட்டது.

அக்கருத்தானன்றே பின்னும்

"கண்டவர்பாவவெற்பைக்கணத்தினுண்டூளியாக்கு
மொண்டிறற்சூலவேற்கையும்பர்கோனிராமநாதன்." என்பதூஉம்,

"இன்ன மொருகா லெனதிடும்பைக் குன்றுக்குங்
கொன்னவில்வேற் சூர்தடிந்த கொற்றவா—முன்னம்
பனிவேய் நெடுங்குன்றம் பட்டுருவத் தொட்ட
தனிவேலை வாங்கத் தகும்."

என்புழியும் இடுக்கண் குன்றாக உருவகஞ்செய்யப்பட்டமை காண்க.

அடர்தல் - வந்துறுதல். அது - இடுக்கண். அதற்கு நாதன் என்றது தம்மை வழிபாடு செய்யாதாருக்கெங்குள விடருஞ் சூழ்வுற் றின்னலே புரியாநிற்கு மவரியல்பு நோக்கி. போற்றல் செய்வாருக்கு இடுக்கண்வெற்புத் துகள்படத் துளைக்கும் மேலோனாகி அறக்கருணைபுரிந்தும், அல்லார்க்கு அவ்விடுக்கணுறுவிக்கு நாதனுமாகி மறக்கருணைபுரிந்துமருளுவர் என்றவாறாயிற்று.

அதனை

"அன்றினார்க்கிடர்செய்வானுமைந்தொழிற்காணுற்போலத்
துன்றினார்க்கிடர்களைப்பத்தோன்றியகணேசனென்ப."

"வேண்டிய அடியர்க்கெல்லாம்விக்கினங்கெடுப்பாய்போற்றி
வேண்டிவர்தனைசெய்யார்க்குவிக்கினங்கொடுப்பாய்போற்றி."

என வருவனவற்றாலுணர்க.

படர் - துன்பம். பவம் - பாவம். படி - பூமி. இடர் - மூவகையான் வரும் பிறவித்துன்பங்கள். எவ்வுலகி லெவ்யோனியி லெவ்விடம்பெடுத் தெவ் வவத்தையுற்று நிற்பினு மென்பார் "எங்கணுமெர்தஞான்று" மென்றார். வியங் கோள் வேண்டிக்கோடற்பொருளில் வந்தது. (உ)

வ.ரம்.

☞ சேதுபுராண மூலமும் எம்மாலெழுதப்படும் இவ் உரையும் விரைவில் புத்தகரூபமாக வெளிப்படுத்தப்படுமாதலினால் ஒருவரும் எமது அநுமதியின்றி அச்சிடப்படாது.

ஆ. சண்முகரத்தினசர்மா
பத்திராதிபர்.

## பத்திரிகைவேதனம்.

| | ரூ | ச |
|---|---|---|
| உள்ளூருக்கு வருஷ் க-க்கு | உ | 00 |
| இலங்கை இந்தியாவுக்கு வருஷ் க-க்கு ... ... | உ | உ௫ |
| பினங்கு சிங்கப்பூர் வருஷ் க-க்கு | உ | ௩அ |
| மோரீஸ் நெட்டால் வருஷ் க-க்கு | ௩ | 00 |
| தனிப்பிரதி ... ... | | உ0 |

☞ கையொப்ப நேயர்கள் பத்திரிகை வேதனத்தை முற்பணமாகஅனுப்பி உதவி செய்யும்படி வேண்டுகின்றோம்.

## விளம்பரவேதனம்.

| | ரூ. | ச. |
|---|---|---|
| வரி க-க்கு ... ... | | அ |
| கூற்பத்திக்கு ... | க | 00 |
| அரைப்பத்திக்கு ... | உ | 00 |
| ஒருபத்திக்கு ... ... | ௩ | ௫0 |
| ஒருபக்கத்துக்கு ... | ௬ | 00 |

பொ. மாணிக்கம்பிள்ளை
ஞானப்பிரகாசஆபீஸ்
வண்ணார்பண்ணைப்போஸ்டு
யாழ்ப்பாணம்.

## விக்கிரய புத்தகம்.

| | | ரூ. சதம் |
|---|---|---|
| க. | தண்டியலங்காரப்புத்துரை | க—00 |
| உ. | யாப்பருங்கலக்காரிகைப் புத்துரை | க—00 |
| ௩. | சூடாமணிநிகண்டு கஉ தொகுதி க-வது உ-வது சொற்பொருள் கஉ-வதுஉரை | ச—00 |
| ச. | இதோபதேசம் | 0—அ |
| ௫. | நீதிநெறிவிளக்கப்புத்துரை | 0—௩௪ |
| ௬. | திருவாதவூரர்புராணமூலம் | 0—உ௫ |
| எ. | இலக்கணசந்திரிகை | 0—உ௫ |
| அ. | மேகதூதக்காரிகை | 0—உ௫ |

அ. குமாரசுவாமிப்பிள்ளை
சுன்னாகம்.

துய்யதோர்மறைகளாலுந் துதித்திடற்கரியசெவ்வேள், செய்யபேரடிகள்வாழ்க சேவலுமயிலும் வாழ்க, வெய்யசூர்மார்புகீண்ட வேற்படைவாழ்க வன்னான். பொய்யில்சீரடியார்வாழ்க வாழ்கவிப்புவனமெல்லாம்.

*Printed and published by the Proprietor and Publisher* **P. Manickam Pillai** *at the Tirugnanasampanther Press, Jaffna*

# இந்துஸ்தான் சகாய வீமாச்சங்கம் (லிமிற்றட்)

௧௮௮௨ம் வருஷத்து இந்தியசங்க
சட்டப்பிரகாரம் இச்சங்கம்
பதிவுசெய்யப்பட்டது.

இதற்கு மூலதனமாக ஒருகோடிரூபா
அநுமதிசெய்யப்பட்டிருக்கின்றது.

இதன்தலைமை அதிகாரசாலை
கல்கத்தாவிலே டல்ஹவுஸி சந்தி
௫0ம் நம்பர் கட்டடம்.

சபாநாயகர்

காஸிம்பசார் மகாராஜா மணீந்திரசந்திர நந்திபகதூர்

உப சபாநாயகர்கள்

௧. நாட்டூர் மகாராஜா ஜகதீந்தரநாதருய் பக்தூர்.

௨. தீகபட்டியாராஜா பிரமாதநாதருய்.

இந்தச் சங்கத்தில் நூறுரூபா முதற்கொண்டு எவ்வளவு பெருந்தொகைக்கும் பொருந்திக்கொண்டு அதற்குரிய வீதப்படி கட்டிவரலாம். மற்ற வீமாக் கம்பனிகளைப் பார்க்கிலும், இந்தச்சங்கம் விசேஷ அனுகூலமுடையது. இந்தச்சங்கத்திலே கட்டுகிற காசு சிலகாலங்களிற் கட்டத்தவறினும் நட்டமாகாது. மற்றக் கம்பனிகளைப்பார்க்க இச்சங்கத்தினது கட்டுவீதம் மிகச் சகாயமானது.

எஸ். கே லோட்டன் அன் கோ
இலங்கை ஏசண்டு
பறங்கித்தெரு
யாழ்ப்பாணம்.

## திருஞானசம்பந்தர் அச்சுக்கூடத்தில் விலைக்கிருக்கும் புத்தகங்கள்.

| | ரூ | ச |
|---|---|---|
| திரிகோணசைலபுராணம் | 0 | ௭௫ |
| இரகுவம்சம் | ௧ | ௭௫ |
| நல்லைவெண்பாமூலம் | 0 | ௧0 |
| யாழ்ப்பாணச்சமயநிலை விரோதிகிருது (வருஷ) | 0 | ௧0 |
| வாக்கியபஞ்சாங்கம் | 0 | ௨௫ |
| திருவூடல் (அச்சில்) | | |

போ. மாணிக்கம்பிள்ளை
ஞானப்பிரகாச ஆபிஸ்
வண்ணார்பண்ணைப்போஸ்டு
யாழ்ப்பாணம்.

யாழ்ப்பாணம்—திருஞானசம்பந்தர் அச்சுக்கூடம்.